"ஒப்பரேசன் தவளை"
ஒரு நெடுப்பாய்ச்சல்

# வெளிச்சம்

மார்கழி - 1993
விலை: 20/-



விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்

பலசரக்குப்பொருள்களுக்கென்று
தேடிவருபவர்கள்
டயமண்ட் றேடேர்ஸுக்கே!

தரமான பலசரக்குப்பொருள்களை
இல்லையெண்ணாது
சில்லறையாகவும்
மொத்தமாகவும்
விற்பனைசெய்யும் நிலையம்
டயமண்ட் றேடேர்ஸ்

உங்கள் தேவைகளை நிறைவு செய்கிறது

**டயமண்ட் றேடேர்ஸ்**
(பலசரக்கு வியாபாரம்)
**DR.** சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.



வடித்து இறக்கினால்
ரோஜா நிறத்தில் பூத்திருக்கும்,
''பூநகரி'' மொட்டைக் கறுப்பன் சோறு.
கரைத்துக் காயவைத்த கழிமண்போல...
பசைப்பிடிப்பாகக் குழையும்
''பலாலி'' மரவள்ளிக் கிழங்குக் கறி,
''பொன்னாலை''ப் பாலத்து சிறுதிரளிக் குழம்பு,
எல்லாம் குழைத்து ஒருகவளம்
செத்தவன் நாக்கிலும் நீரூறும்.
உண்டு மகிழ்ந்து எத்தனை நாளாச்சு?
சாப்பிட்ட வாய்க்கு ஒரு பிளவு பாக்கும்
சாறுபிழியும்
''மாவிட்டபுரத்து'' குருத்து வெற்றிலையும்;
வாய்க்கு ருசி.
சாப்பிட்டால் நாக்குச் சிவக்கும்.
எத்தனை நாளாச்சு?
எங்கள் நிலம்
எங்கள் கடல்
ஆனால் போகமுடியவில்லையே
உனக்கேன் கோபம் வரவில்லை?
மொட்டைக் கறுப்பனை மறந்து
சீனத்துப் பச்சையுடன் திருப்தி கொண்டாயா?
''ஆனையிறவில்'' உப்பு வீணில் கரைகிறது.
அள்ளிவர உனக்கேன் ஆசைவரவில்லை?
இழந்தவற்றை மீளப்பெற
எழும்பு.

—மாலிகா—

# வெளிச்சம்

மார்கழி-1993
இதழ்-21

கிழக்கு வானம் சிவக்கும் நேரம்
கிளிகள் பாடிப் பறக்கும் நேரம்
நிலத்தில் வீரம் பிறக்கும் ஈழம்
நிமிர்ந்து தமிழர் நடக்கும் காலம்.

ஆம், மீண்டும் தமிழன் நிமிர்ந்து நடக்கும் காலம் இதுதான். முன்னைப் புகழிழந்து, முடியிழந்து, கொடியிழந்து தமிழினம் நீண்டகாலம் நித்திரையில் கிடந்தது.

களமாடி நிலமாண்ட தமிழன் இடையில் நுளம்படிக்கக்கூட கைகளை நீட்டாதவனாக நீள்துயில் கொண்டான்.

தேரென்றும், போரென்றும், கரியென்றும், பரியென்றும் சமர்க்களத்து வார்த்தைகளே தமிழன் வாயிலிருந்து உதிர்ந்த காலம் மறைந்து திறையென்றும், சிறையென்றும், சோறென்றும், கறியென்றும் வெறும் சதைப்பிண்டமாக, சோற்றுச் சிலையாக வாழ்ந்து, வந்தவர்களுக்குச் சந்தனம் அரைத்துக்கொடுத்து தாழ்ந்து கிடந்தான்.

தன்கையில் பூட்டிய விலங்கை உடைக்க வழிதேடாது, தானிருக்கும் சிறைக்கூண்டைத் தவிடுபொடியாக்கப் பலம்தேடாது, போர்க்குணம் இழந்து. அன்பு, அகிம்சை, சமரசம், சன்மார்க்கம் என்று தனது இருப்புக்குச் சப்பைக் காரணங்கள் தேடிக்கொண்டு தமிழன் பிச்சை ஏற்றுவாழ்ந்தான்.

தமிழகத்தில் சேரன், சோழன், பாண்டியன் என்று கொள்ளுப் பாட்டன் காலத்துக் கதைகளைச் சொல்லியபடி தமிழன் குறட்டை விட்டுத் தூங்கிக்கிடந்தான்.

தமிழீழத்தில் எல்லாளன், சங்கிலியன், பண்டாரவன்னியன் என்று சொல்லியபடி தன் வாழ்விழந்தும், வாழாவிருந்தான்.

நீண்டகாலம் இந்த நிகழ்வே தொடர்ந்தது.

ஆங்கிலேயனிடமிருந்து இந்திக்காரரிடம் ஆட்சிமாறியதை இந்தியத்தமிழன் தனக்கு விடுதலை வந்துவிட்டதென்று நம்பிப் பள்ளுப் பாடினான்; கும்மிகொட்டிக் குதூகலித்தான்.

வெள்ளைக்காரனிடமிருந்து சிங்களவருக்கு அரசாட்சி மாறியதை தன்கையில் கிடைத்த சுதந்திரமென்று ஈழத்தமிழன் துள்ளிக் குதித்தான்.

தமிழன் பாக்குநீரிணைக்கு அக்கரையில் ஏமாற்றப்பட்டான்; இக்கரையில் ஏமாளி ஆக்கப்பட்டான்.

இன்றுதான் தமிழன் நீண்ட "துயில்காலம்" முடிந்து மீண்டும் தமிழீழத்தில் நெஞ்சை நிமிர்த்தி நிற்கின்றான்.

உலகத்தமிழர்கள் ஈழத்தமிழரைப் பார்த்தும், பரவசப்பட்டும்தங்கள் நெஞ்சையும் நிமிர்த்தி நிறைவடைகின்றனர்.

முன்னைத்தமிழரின் வீரம் தமிழீழத்தின் அடிவேரிலிருந்து முளை விடத்தொடங்கி தளிர்த்து, கிளைபரப்பி, விழுதுவிட்டு விசாலித்து நிற்கிறது.

உலகத்திசையெங்கும் தமிழனுக்கு அடிக்க ஓங்கிய கைகள் இன்று அடிக்காது கீழிறங்குகின்றன.

உதைக்கத் துடித்த கால்கள் இன்று ஒதுங்கிக் கொள்ளுகின்றன. ஏன் தெரியுமா?

பிரபாகரன் என்ற பெயருக்கு அவ்வளவு சக்தி.

பிரபாகரன் தமிழனாக, தமிழருக்காக இருக்கின்றானே என்ற அச்சம்.

தமிழருக்கு எதிராக எங்கென்றாலும் ஓங்கிய கைகள் உடைக்கப்படும் என்ற நடுக்கம்.

கனடாவாக இருக்கட்டும், கர்நாடகாவாக இருக்கட்டும், இத்தாலி, திருப்பத்தூராக இருக்கட்டும், எங்களுக்காகப் புலிகள் இருக்கின்றார்களென்ற புதுநம்பிக்கை இன்று தமிழருக்குள் பிறந்து வளர்ந்து வருகிறது.

கொழும்பு கொச்சிக்கடையிலும், செட்டியார் தெருவிலும் கூட தமிழருக்கு ஏதாவது ஏற்படின் "கொட்டியா" வரும், வந்து நீதிகேட்கும் என்ற பயம் சிங்களவருக்கும் ஏற்பட்டிருக்கிறது.

பிரபாகரனும், புலிப்படையும் ஈழத்தமிழருக்கான "விடுதலை ஒளி"கள் என்ற நிலைமை மாறி, உலகத் தமிழருக்கான, ஒடுக்கப்படும் மக்களுக்கான ஒருசக்தி என்ற உணர்வு உருவாகிவருவதை எவராலும் இடைநிறுத்தமுடியாது.

எனவே தமிழினம் உறக்கம் கலைக்கும் நேரத்தில் அவர்களின் படுக்கைக்கருகில் நின்று பள்ளிஎழுச்சி பாடுவோம்.

வீரம் விளையும் எங்கள் தாயகத்தில் வெளிச்சம் பரவ இணைந்து பாடுபடுவோம்.

# இலட்சியத்தில் உறுதிபூண்ட மக்கள் விடுதலையை வென்றெடுப்பார்கள்



*தமிழீழத் தேசியத்தலைவர்*
**திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

எனது அன்பிற்கும் மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே!

இன்று மாவீரர் நாள்.

எமது சுதந்திர இயக்கத்தின் சரித்திரச் சிற்பிகளான விடுதலை வீரர்களை நாம் நினைவுகூரும் நன்நாள்.

ஆண்டாண்டு காலமாக அடிமை விலங்கில் முடங்கிக் கிடந்த எமது தாயகத்தை, வீறுகொண்டு எரியும் விடுதலைக் களமாக மாற்றிவிட்ட வீரமறவர்களை நாம் நினைவு கொள்ளும் புனிதநாள்.

எமது நாடு எமக்கே சொந்தம் என்ற உரிமைக்குரலை உலகெங்கும் முழங்கச்

செய்த உன்னத தியாகிகளை, நாம் எமது நெஞ்சப் பசுமையில் நிறுத்திக்கொள்ளும் தேசிய நாள்.

மாவீரர் நாள் எமது தேசத்தின் துக்க தினம் அல்ல; நாம் கண்ணீர் சிந்திக் கவலை கொள்ளும் சோகதினம் அல்ல. இன்றைய நாள் ஒரு தேசிய எழுச்சி தினம்; எமது தேசம் சுதந்திரம் வேண்டி உறுதி பூணும் புரட்சித்தினம்.

மாவீரர்கள், ஒரு சத்திய இலட்சியத்திற்காக மரணிக்கிறார்கள். அவர்களது சாவு, சாதாரண மரண நிகழ்வு அல்ல. எமது தேச விடுதலையின் ஆன்மீக அறை கூவலாகவே மாவீரர்களது மரணம் நிகழ்கிறது.

எமக்கு ஒரு நாடு வேண்டும்; எமது மக்களுக்கு விடுதலை வேண்டும்; எமது இனம் சுதந்திரமாக வாழவேண்டும் என்ற ஆக்ரோசமான இலட்சிய வேட்கையுடனேயே மாவீரர்கள் களத்தில் விழுகிறார்கள். எனவே, எமது மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும், எமது நாட்டின் விடுதலையை முரசறையும் வீரசுதந்திரப் பிரகடனமாகவே சம்பவிக்கிறது.

இந்த நிலத்தின் நெஞ்சில் படுத்துறங்கும் எமது மாவீரர்களின் கல்லறைகளில் இருந்து இந்த சுதந்திரப் பிரகடனங்களின் பேரொலி எழுகிறது. ஆறாயிரத்திற்கும் அதிகமான இலட்சிய வேங்கைகளின் சத்திய வாக்காக இந்த விடுதலை முழக்கம் கேட்கிறது. இந்த விடுதலை முழக்கத்தில் எழுச்சி கொண்டே எமது இலட்சியப் பயணம் தொடர்கிறது.

இரத்தம் சிந்தும் அரசியலாக எமது போராட்ட வரலாறு நீண்டு செல்கிறது. எமது விடுதலை இயக்கம் ஆரம்பமாகிய காலத்திலிருந்து இன்றுவரை, இந்த நீண்ட கால இடைவெளியில், நாம் எத்தனையோ நெருக்குதல்களையும், சோதனைகளையும், ஆபத்துக்களையும் சந்தித்தபோதும் எமது அடிப்படையான அரசியல் இலட்சியத்தில் இருந்து என்றுமே நாம் தளர்ந்ததும்இல்லை; தடுமாறியதும் இல்லை. தமிழீழத் தனியரசே தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு இறுதியான, உறுதியான தீர்வு என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கையும் தெளிவும் உண்டு. எமது நிலைப்பாட்டை எமது எதிரி மட்டுமன்றி, முழு உலகமும் நன்கறியும்.

தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தனியரசு அமைப்பதைத் தவிர, தமிழ் மக்களுக்கு வேறு வழியில்லை எனத் தீர்மானங்கள் நிறைவேற்றி, மக்களிடம் மனுப் பெற்ற கட்சிகளும், ஆயுதப் போராட்டம் மூலமே தனியாட்சி நிறுவமுடியுமென ஆர்ப்பரித்த ஆயுதக் குழுக்களும், எப்பொழுதோ தமது அரசியற் குறிக்கோளைக் கைவிட்டுத் தமிழ் இனத்திற்குத் துரோகம் இழைத்து நிற்கின்றனர். எமது இயக்கம் மட்டுமே அன்றிலிருந்து இன்றுவரை, வரித்துக் கொண்ட குறிக்கோளிலிருந்து வழி தவறவில்லை.

தமிழீழத் தனியரசு என்ற இலட்சியத்தை அடைவதிலுள்ள இமாலய இடையூறுகளை நாம் அறியாதவர்கள் அல்ல. அன்றியும் இந்த இலட்சியத்திற்கு எதிராக, எந்தெந்த சக்திகள் எப்படியெல்லாம் செயற்படும் என்பதும் எமக்குத் தெரியாதது அல்ல. பிரதேச வல்லரசின் ஆதிக்க அபிலாசைகளும், உலக வல்லரசுகளின் கேந்திர இலக்குகளும் எத்தகைய தலையீடுகளை ஏற்படுத்தும் என்பதையும் நாம் எதிர்பாராமல் இருக்கவில்லை. இந்தச் சவால்கள் எழுந்தபோதெல்லாம் நாம் அதைத் துணிந்து எதிர்கொள்ளத் தவறவில்லை. அழிவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டபொழுதும், நாம் கொண்ட கொள்கையைக் கைவிடவில்லை. ஆதிக்க சக்திகளின் ஆவேசப் புயல்களும் எம்மை ஆட்டம்காணச் செய்யவில்லை.

தார்மீக அடிப்படையில், நாம் ஒரு உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். எமது போராட்ட இலட்சியம் நியாயமானது. சர்வதேச மனித அறத்துக்கு இசைவானது. எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள். தனியரசை அமைக்கும் தகுதி பெற்றவர்கள். சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் இந்த உரிமையை எவரும் நிராகரித்துவிட முடியாது.

நீதியின் அடிப்படையில், மனித தர்மத்தின் அடிப்படையில், சத்தியத்தின் அடிப்படையில், நியாயப்பாடு எமது பக்கமாக இருக்கும்பொழுது நாம் எமது போராட்ட இலட்சியத்தில் உறுதிபூண்டு நிற்கவேண்டும். இலட்சியத்தில் உறுதிபூண்டு இறுதிவரை போராடும் மக்கள்தான் விடுதலையை வென்றெடுப்பார்கள்.

இந்த உலகமானது மானிட தர்மத்தின் சக்கரத்தில் சுழலவில்லை என்பது எமக்குத் தெரியாததல்ல. ஒவ்வொரு நாடும் தனது தேசிய சுயநலத்தையே முதன்மைப்படுத்துகிறது. மக்கள் உரிமை, மனித உரிமை என்ற தார்மீக அறத்திலும் பார்க்க பொருளாதார, வர்த்தக நலன்களே இன்றைய உலக ஒழுங்கமைப்பை நிர்ணயிக்கின்றன. சர்வதேச அரசியலும் சரி, ராஜ தந்திர உறவுகளும் சரி இந்த அடிப்படையில்தான் செயற்படுகிறது. இந்த நிலையில் எமது போராட்டத்தின் தார்மீக நியாயப்பாட்டை சர்வதேச சமூகம் உடனடியாக அங்கீகரித்துவிடும் என, நாம் எதிர்பார்க்க முடியாது. ஆயினும், நாம் அந்த அங்கீகாரத்திற்காகத் தொடர்ந்து குரல் எழுப்பிவரவேண்டும். மாறிவரும் உலகில் எதிர்பாராத மாற்றங்கள் நிகழும். ஒரு சந்தர்ப்பத்தில், சர்வதேச சூழ்நிலை எமக்குச் சாதகமாக அமையலாம். அப்பொழுது உலகத்தின் மனச்சாட்சி நியாயத்தின் சார்பாக எமது பக்கம் திரும்பும்.

உண்மையில் எமது போராட்டத்தின் வெற்றி உலகத்தின் கையில் தங்கியிருக்கவில்லை. எமது வெற்றியானது எமது கையில், எமது பலத்தில், எமது உறுதிப்பாட்டிலேயே தங்கியிருக்கிறது. நீதியும், நியாயமும் எமது பக்கமாக இருந்தால் மட்டும் போதாது. நாம் வலிமை பெற்றவர்களாக இருக்கவேண்டும். போராடும் திறமை பெற்றவர்களாக இருக்கவேண்டும். தளராத உறுதி பெற்றவர்களாக இருக்கவேண்டும்.

எமது எதிரியான சிங்களப் பேரினவாத அரசு, எமது மக்களின் பிரச்சினையை நீதியின் அடிப்படையில், மனித தர்மத்தின் அடிப்படையில் தீர்க்க விரும்பவில்லை. பலாத்காரப் பிரயோகத்தின் அடிப்படையிலேயே தமிழர் பிரச்சினைக்கு முடிவுகட்ட முனைகிறது.

சிங்களப் பேரினவாதத்தின் ஈவிரக்கமற்ற இராணுவப் போக்கு காரணமாக, தமிழரின் இனப்பிரச்சினை நாற்பது ஆண்டு காலத்திற்கு மேலாக, தீர்வின்றி, முடிவின்றி இழுபடுகிறது. நீண்ட நெடுங்காலமாக, நீதி கிடைக்குமெனக் காத்திருந்த தமிழர்கள், சாவையும் அழிவையும், தாங்கொணாத் துன்பத்தையும் சந்தித்ததைத் தவிர வேறு எதையும் காணவில்லை.

சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் பிரச்சினைக்குச் சமாதான வழியில் ஒரு நியாயமான தீர்வை வழங்கப்போவதில்லை எனக் காலங்காலமாக நாம் வலியுறுத்திவந்த அரசியல் உண்மையை, எமது மக்கள் இன்று ஆழமாக உணரத் தொடங்கியுள்ளனர்.

எமது இயக்கம் என்றுமே சமாதானப் பாதைக்குக் குறுக்காக நிற்கவில்லை. சிங்கள அரசுக்கு நாம் எத்தனையோ சந்தர்ப்பங்களை வழங்கினோம். திம்புவில் தொடங்கி கொழும்புவரை பேச்சு வார்த்தைகளில் பங்குகொண்டோம். ஆனால் சிங்கள அரசு தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு எதையும் முன்வைக்க மறுத்தது. சமரச வழியைக் கைவிட்டு, போர்க்களத்தில் பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்பியது.

1990ஆம் ஆண்டு, ஜூன் மாதம், இரண்டாவது கட்டமாக தமிழீழப் போர் ஆரம்பமாகிய காலந்தொட்டு, எமது விடுதலை இயக்கம், சமாதானத்தின் கதவு களை அகலத் திறந்துவைத்தது. பேச்சு வார்த்தைக்கு இணங்கி நாம் நேசக்கரத்தை நீட்டிய பொழுதெல்லாம் சிங்களப் பேரின வாதம் அதைப் பற்றிக்கொள்ள மறுத்தது. போர் நிறுத்தம்செய்து, பொருளாதாரத் தடைகளை நீக்கி சமாதானத்திற்கான சூழ் நிலையை உருவாக்குமாறு நாம் மாறி மாறி விடுத்த கோரிக்கைகளையும் நிராகரித்தது. சமாதானத்திற்குப் பதிலாக யுத்தத்தை யும், அமைதிக்குப் பதிலாக அழிவையும் சிங்களப் பேரினவாத அரசு எமது மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டது. இறுதியில் தமிழ ரின் உரிமைப் போராட்டத்தைப் ''பயங் கரவாதம்'' எனச் சித்திரித்துக்காட்ட முனைந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக இனப்பிரச்சினை என்பதே இல்லையெனப் பகிரங்கமாகவே பிரகடனம் செய்துள்ளது.

இராணுவபலத்தைக்கொண்டு, தமிழ ரின் சுதந்திர இயக்கத்தை அழித்துவிட லாம் என்ற இறுமாப்பில் சிங்கள ஆளும் வர்க்கம் சமாதானத்தின் கதவுகளை இறுகச் சாத்திவிட்டது. தமிழ்மண்ணை ஆக்கிர மித்து, தமிழரை அடக்கியொடுக்கி ஆள வேண்டுமென்ற குறிக்கோள் முன்பிருந்த தைவிடத் தீவிர போக்கை எடுத்தது. இந்த இராணுவவாதக் கடும்போக்கின் வெளிப் பாடாகவே, யாழ்ப்பாணக் குடாநாடுமீது படையெடுப்புகளை நடத்தவும் அரசு திட்டம் தீட்டியது.

இந்த நெருக்கடியான சூழ்நிலையில் தான் நாம் சிங்களப் போர்அரக்கனுக்கு தகுந்த பதிலடி கொடுக்கத் தீர்மானித் தோம்.

மண்கிண்டிமலையிலும், புலோப்பளை யிலும், இறுதியாகப் பூநகரியிலும் நாம் திட்டமிட்டு நிகழ்த்திய வெற்றிகரமான தாக்குதல்கள் சிங்கள இராணுவவாதத்திற் குக் கொடுக்கப்பட்ட பேரடிகளாகும். இதில் பூநகரிச் சமர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. போர்க்கலையில் புலிகள் இயக் கத்தின் படிநிலை வளர்ச்சியின் உயர்கட்டப் பரிமாணத்தை இந்தச் சமர் எடுத்துக் காட்டுகிறது. பெரும் படையணிகளை நுட்ப மாக நகர்த்தி, எதிரியின் பாசறையைப் பல முனைகளில் ஊடுருவி, பெரும் கூட்டுப் படைத்தளங்களைக்கூட துரிதகதியில் அழிக் கவல்ல அபாரமான சக்தி புலிகளிடமுண்டு என்பதை, நாம் சிங்களப் பேரினவாதத் திற்கு நன்கு உணர்த்தியுள்ளோம். இனப் பிரச்சினையே இல்லாமல் போய்விட்டது என்று கூறியவர்களுக்கு இனப்பிரச்சினை யின் விஸ்வரூபத்தைக் காட்டியுள்ளோம். இந்தச் சமர்களில் ஆயிரத்திற்கும் மேற் பட்ட ஆயுதப்படையினர் அழிக்கப்பட்டுள் ளனர். எமது தாயக மண்மீது படையெ டுப்பை நடத்தலாம், ஆக்கிரமிப்பை நிகழ்த் தலாம், அகலக்கால் வைக்கலாம் எனக் கற்பனை செய்துவரும் இராணுவவாதிகளுக் கும்பேரினவாதிகளுக்கும், புலிகளின் இந்தத் துணிகரத் தாக்குதல்கள் தகுந்த பாடமாக அமையும் என நினைக்கிறேன். இராணுவத் தீர்வு என்ற பாதை எத்தகைய பயங்கர மான பேரழிவுகளை ஏற்படுத்தும் என்பதை கொழும்பிலிருந்து ஆட்சிபுரிபவர்கள் இனி யாவது உணர்ந்துகொள்வார்களென நம்பு கிறேன்.

சிங்களப் பேரினவாத அரசு போன்று, நாம் இன்னும் சமாதானக் கதவுகளை அடைத்துவிடவில்லை; சமரசப் பாதைக்கு முட்டுக்கட்டை போடவில்லை. ஆனால் சிங்கள ஆட்சிபீடம் தனது இராணுவ அணுகுமுறையை இறுகப் பற்றிக்கொண்டு, எமது மண் மீது படையெடுப்பை நிகழ்த்தி னால், அல்லது எமது மக்கள்மீது கண் மூடித்தனமான தாக்குதல்களைத் தொடரு மானால், எமது விடுதலை இயக்கம் சமா

தானத்தின் கதவுகளை நிரந்தரமாகவே மூடிவிடும் என்பதை, நான் இங்கு தெட்டத்தெளிவாகக் கூறவிரும்புகிறேன்.

சிங்களப் பேரினவாதத்தின் தீவிரவாதப் போக்கில் மாற்றம் ஏற்படுமென நான் என்றுமே நம்பியதில்லை. அந்த மாற்றம் ஏற்படாதவரை தமிழருக்கு நீதிகிடைக்கப் போவதில்லை.

சிங்களப் பேரினவாதத்தின் கடுமையான போக்கு, தனியரசு என்ற ஒரே பாதையைத்தான் தமிழீழ மக்களுக்குத் திறந்து வைத்திருக்கிறது. அந்தப் பாதையில் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவும் இல்லை.

இந்தப் பாதைவழியேதான் எமது விடுதலை இயக்கம் தனது இலட்சியப் பயணத்தைத் தொடர்கிறது.

இந்தப் பாதை மிகவும் கடினமானது. கற்களும் முட்களும் நிறைந்தது; விலங்குகளும் விஷ ஜந்துக்களும் நிறைந்தது. ஆயினும் நாம் இந்தப் பாதை வழியே எமது பயணத்தைத் தொடர்கிறோம்.

எமது மாவீரர்கள் இந்தப் பாதை வழியாகவே நடந்தார்கள்; எமக்கு வழிகாட்டியாக முன்னே சென்றார்கள். கற்களையும் முட்களையும் அகற்றி, பாதையைச் செப்பனிட்டுத் தந்தார்கள்; விலங்குகளையும், விஷ ஜந்துக்களையும் கொன்றழித்தார்கள்; அந்தப் பாதை வழியே விளக்கேற்றி வைத்தார்கள்.

எமது மாவீரர்கள் ஏற்றிவைத்த அந்தச் சுடரொளியில், தெளிவாகப் புலப்படும் அந்தச் சுதந்திரப்பாதை வழியாக, நாம் எமது இலட்சியப் பயணத்தைத் தொடர்வோமாக.

*புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்*

*(1993 ஆம் ஆண்டு மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழத்தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய செய்தி)*

## வேங்கையாகா விட்டால்...

க. பிரமகதீஸ்வரி

*ஆண்ட பரம்பரை நாங்கள் அடிமையாவதோ?*
*அகிலமெலாம் இனியும் நாங்கள் அகதியாவதோ?*
*மான மறவர் கூட்டம் நாங்கள் கோழையாவதோ?*
*ஈழ மண்ணை இழந்த நாங்கள் உறக்கம் கொள்வதோ?*

*கிட்ட வந்துவிட்டான் எதிரி கிளம்பி வாடா களத்தே!*
*எட்ட நின்று பார்க்க உனக்கு இதுவா கிடைத்த நேரம் — அவன்*
*கொட்டம் அடக்கத் தமிழரெலாம் வேங்கையாகா விட்டால்*
*வேட்டை நாய்கள் வீட்டை வந்து வேட்டையாடும் விரைவில்.*

சிறுகதை

# குளவிக்கூடு

"எழுபத்தேழு"

"இல்லை எழுபத்தாறு"

"இல்லை எழுபத்தேழு"

"முழியா! எழுபத்தாறடா".

"என்னடா மூழியா எண்டிறாய், நீதான் மூக்குச்சளியன்"

"மூக்குச்சளியனோ!"

இருவரும் கட்டிப்புரண்டு உருளுகின்றனர். ஒருவன் மூக்கிலே ஒருவன் பிறாண்டுகிறான். மெல்லிதாக இரத்தம் வருகின்றது.

கூடிநின்றவர்கள் இருவரையும் விலக்குகின்றனர்.

"இப்ப என்னடா பிரச்சினை?" நின்றவர்களில் ஒருவன் கேட்கிறான்.

"எங்களுக்கு எழுபத்தேழு" சண்டையிட்டவர்களில் ஒருவன்.

"இல்லை, இவங்களுக்கு எழுபத்தாறு. ஒண்டைக் கூட்டிச்சொல்லுறான். கள்ளக்கணக்கு"

"கள்ளக்கணக்கோ, நீதான்ரா கள்ளன்"

"ஏய்! ரெண்டுபேரும் சத்தம் போடக்கூடாது. திருப்பி அளப்பம். எங்க சுஜீவன் ஒருக்கா திருப்பி அள"

சுஜீவன் கிட்டித்தடியால் அளக்கிறான்.

"அறுபத்தொன்பது, எழுபது, எழுபத்தொன்று, எழுபத்திரெண்டு, எழுபத்திமூன்று, எழுபத்திநான்கு, எழுபத்தைஞ்சு, எழுபத்தாறு .. எழுபத்தாறுதான்...!"

"சரி, இனிச்சண்டை பிடிக்கக் கூடாது. விளையாடுங்கோ"

நடுவு நிலைமைத் தீர்ப்புக் கூறிவிட்டு அவர்கள் கிட்டிப்புள் விளையாடுவதைப் பார்த்து ரசித்தவாறே புளியமரத்தின் கீழிருந்த கல்லொன்றில் அமர்ந்திருக்கிறான் ஜனகன். அந்தப் புளியடி வெட்டையில் தினமும் மாலையில் அவ்வூர்ச்சிறுவர்கள் சந்தித்துப் பருவகாலத்திற்கேற்ப பட்டம் விடுவதும், கிட்டி அடிப்பதும், கெந்திப் பிடிப்பதும், கிளித்தட்டு விளையாடுவதுமாக அவர்கள் ஆனந்திப்பது வழக்கம். அன்றும் அடிதடியின் பின்பும்

நடராசா இராமநாதன்

பொழுது இருள்மங்கும் வரையில் விளையாடிவிட்டு வீடு செல்கின்றனர். போகும்போது மாமரத்தில் ஏறி மாங்காய்பிடுங்கிச் சாப்பிடுவதும், அருகில் உள்ள கிணற்றில் நீரள்ளிக்குடித்து மகிழ்ந்து குரோதம் மறந்து செல்வதும் அவர்களது வழமையான செயல்களாகும்.

சுற்றிவரப் பனந்தோப்புக்களாலும் பாரியமரங்களாலும் சூழப்பெற்று நடுவிலே இருப்பதுதான் அந்தப்புளியடிவெட்டை. அந்தக்கிராமத்தின் பல தலைமுறையினர் விளையாடி மகிழ்ந்த இடத்தைச்சுற்றி இப்போ சில வீடுகள் இருக்கின்றன. முன்னர் என்றால் தூரத்தூரவே குடில்கள் அமையப் பெற்றிருந்தன.

மஞ்சள் வெயில் மேற்கில் இருந்து மரங்களிற் கூடாக மெல்லியதாய் எறித்தது. புளியம் பூக்கள் எங்கும் சொரிந்து கிடந்தன. சிறுவர்கள் இரண்டு கன்னைகளாகப் பிரிந்து கிட்டி அடித்துக் கொண்டிருந்தனர். புளியடி வெட்டை கலகலப்பாக இருந்தது.

சுஜீவன் 'புள்'ளைக் குழியிலே வைத்து கிட்டியால் தெண்டுகிறான். 'புள்' விர்ரென்று மேலே பறந்து ரெஜிக்குக்கிட்டே செல்கின்றது. ரெஜி அப் 'புள்'ளை ஏந்துவதற்காக பின்புறமாக காலெடுத்துவைத்துப் 'புள்'ளைப் பிடித்துவிடுகின்றான்.

''சுஜீவன் பட்டான்''

ரெஜிபக்கம் ஆரவாரிக்கிறது.

அசோகன் தெண்டுவதற்காக தயாராகின்றான்.

எங்கிருந்தோ இரண்டு குளவிகள் 'விர்' ரென்று பறந்து வந்து சிறுவர்களைச் சுற்றிவிட்டுச் செல்கின்றது.

''டேய் குளவியடா... இஞ்சற்றா பறக்குது''

வித்தி,குளவியைக் கண்டுவிட்டு ஆர்ப்பரித்தான்.

''குளவியெண்டா அதுபேசாமல் போகுமடா, நீ தெண்டு அசோகன்...''

மீண்டும் விளையாட்டுத் தொடங்கி விட்டது. முழுநினைவையும் ஒன்றிச் சகலரும் விளையாட்டில் இலயித்தனர்.

''ஐயோ குளவி குத்திப்போட்டுது...''

கன்னத்துக்கும் தலைக்கும் இடைப்பட்ட பகுதியைத் தன் வலதுகையால் பொத்திப்பிடித்தவாறே குளறினான் ரெஜி. கிட்டியடியை நிறுத்திவிட்டு அனைவரும் ரெஜிக்கு முதலுதவி செய்வதில் மும்முரமாக ஈடுபட்டனர்.

வலிதாங்க முடியாது அலறிக் கொண்டிருந்தான் ரெஜி. குளவிகொட்டிய இடம் வீங்கிச் சிவந்திருந்தது. மெதுவாக அவ்விடத்தை உற்றுக் கவனித்த ஜனகன், மெல்லிய தும்பு போல் இருந்த இரண்டு கொடுக்குகளை மிக லாவகமாகப் பிடுங்கினான்.

''ஐ..ய்...யோ...!''
கொடுக்குப் பிடுங்கப்படும்போது சற்றுப்பலமாகவே குளறினான் ரெஜி.

''எப்பன் புளி தடவினால் மாறுமடா. உங்கட வீட்டில ஓடிப்போய் எப்பன் எடுத்து வாறிய சுஜீவ்?''

# 11
## வெளிச்சம்

தலை அசைத்துவிட்டு ஓடுகிறான் சுஜீவ்.

''சுஜீவ், அம்மாட்டைச் சொல்லிப் போடாத. அம்மா அடிப்பா''

குளவிகொட்டிய வேதனைக்கும் மேலால் தாயின் பயம் ரெஜியைச் சூழ்ந்து கொண்டது.

சிட்டெனப்பறந்து புளியுடன் வந்தான் சுஜீவ்.

வீங்கிச் சிவந்திருந்த இடத்தில் புளி தடவப்பட்டது. வலிமெல்ல மெல்லக் குறைய மீண்டும் விளையாட்டு ஆரம்பமாகியது. ஆனாலும் விளையாட்டு சோபையிழந்தே காணப் பட்டது.

''என்ன ஜனகன்யோசிக்கிறாய்?''

''இல்லை அசோ. அண்டைக்கும் இந்தக் குளவியள் வந்து வெருட்டிப் போட்டுப் போட்டுதுகள். இண்டைக்கு ரெஜிக்கு குத்திப்போட்டுதுகள். நாளைக்கும் ஆராருக்குக் குத்துதோ தெரியாது. அதுதான் யோசிக்கிறன். நாங்கள் எங்கட வெட்டையில நிம்மதியா விளையாடேலாமல் கிடக்கு''

''டேய், எல்லாரும் வாருங்கோடா; உந்தக்குளவியள் எங்கயிருந்து வருகினம் எண்டொருக்கால் தேடுவம்''

ஒவ்வொருவராகச் சுற்றியுள்ள பனைமரங்கள், பாரியமரங்கள் எல்லாவற்றையும் அண்ணாந்து பார்க்கின்றனர். மாலை மங்கிக்கொண்டு வந்தது. காலுக்குள் மிதிபட்ட சருகுகளின் சப்தம் 'சரக் சரக்' என்று கேட்டது.

''இஞ்ச கிடக்கடா பெரிய குளவிக் கூடு'' வித்தி பலமாகச் சத்தமிட்டான்.

அனைவரும் வித்தி சொன்ன பனை மரத்தை ஒருமித்து அண்ணாந்து நோக்கினர்.

''ஐயோ, பொங்கல்பானையளவு பெரியகூடடா'' என்றான், சுஜீவன்.

''வெளிக்கிட்டுதெண்டா இந்த ஊரையே துலைச்சுப்போடுங்கள். நான் ஓடப்போறன்'' — என்றான் பாலன்.

ஜனகன் வெட்டையை நோக்கி மீண்டும் நடக்கிறான். அவன் பின்னே மற்றவர்கள்.

''குளவிக்கூட்டை எப்பிடியும் துலைக்கவேணும். அப்பத்தான் நாங்கள் நிம்மதியாய் விளையாடலாம்''

ஜனகன் தீர்க்கமாக முடிவெடுத்தான். பொழுதை இருள் கவ்வியதால் சிறுவர்களில் பலர் வீடுசென்றிருந்தனர். கூட நின்றிருந்த நால்வருடன் குளவிக்கூட்டை எப்படி அழிப்பது என்று ஆலோசித்து, அதன் செயற்பாடுகள் பற்றியும்முடிவெடுத்து, அனைவரும் கலைகின்றனர். சிறிது தேய்ந்த நிலவு கிழக்கே தோன்றி ஒளியைப் பிரகாசித்தது.

☐ ☐ ☐ ☐

''என்னடா பாலன் இண்டைக்கு விளையாட வரேல்லய?''

''நான் இனி உங்க வரமாட்டன். உங்க விளையாடினால் குளவி குத்தும் எண்டு அப்பா சொன்னவர். வாசிகசாலையடிக் கிறவுண்டுக்குப் போய் கிறிக்கற் விளையாடப் போறன்.

அங்கையெண்டா ஐஸ்பழமும் குடிக் கலாம்; ஊஞ்சால் ஆடலாம்''

புளியடிவெட்டையில் இன்று சிறு வர்கள் மிகக்குறைவாகவே வந்திருந் தனர்.

உற்சாகமற்ற நிலையில் விளை யாட்டு ஆரம்பமானது.

''என்ன ஜனகன்! உங்கை எங்க யோ ஒரு பனைமரத்தில குளவிக் கூடொண்டு கிடக்காம். உதில நிண்டு விளையாடிறதெண்டிட்டு கூட்டுக்குக் கல்லெறியக் கூடாது... என்ன? பேந்து அதுகள் கலைஞ்சுது எண்டால் சரி யான கரைச்சல்வரும். கொஞ்ச நாளில அதுகள் தன்பாட்டில போய்விடும். எதுக்கும் நீங்கள் கொஞ்சநாளைக்கு இதுக்க விளையாடாமல் விடுறது நல்லது... பேந்து அதுகள் பறந்து வந்து குத்தினால்...''

அந்தப்பக்கமாக வந்த பாலனின் அப்பா—வல்லிபுரவாத்தியார், அடித் துச் சொல்லிவிட்டு அப்பால் போகி றார்.

□ □ □ □

எங்கும் இருள் பரவியிருந்தது. பாதிநிலா உதயமாக இன்னும் ஒரு மணித்தியாலம் இருக்கிறது. பெரிய ஏணிஒன்று இருவர் . தோள்களில். ஜனகனின் கையில் பெரிய வெட்டுக் கத்தி. பதுங்கிப் பதுங்கி பனையை நோக்கி அனைவரும் முன்னேறுகின்ற னர்.

ஜனகன், வித்தி, ரெஜி, சஜீவன், அசோ...

காவிக்கொண்டு வந்த ஏணியை பனைமரத்தின்மேல் சாத்திவிட்டு, அப்பனைமரத்தைச் சுற்றி காவோலை கள் பரப்பப்படுகின்றன.

ஜனகன் மழை அங்கி ஒன்றை இடுப்புவரை அணிந்து, தலைக்குக் கல்நாரினாலான தொப்பி ஒன்றையும் அணிந்து, கையில் வெட்டுக்கத்தியுடன் தயாராகிவிட்டான். கொண்டுவந்த ஏணி பனைமரத்தின் பாதியளவு உயரத்துக்கே போதுமானதாக இருந் தது. மீதி உயரத்தை ஏறிமுடிப்பது என்றே ஏற்கனவே தீர்மானிக்கப்பட் டது. தொடரவேண்டிய செயற் பாட்டுத் திட்டங்களை,எல்லோருக்கும் விளக்கிவிட்டு, ஜனகன் ஏணிமீது பட படவென்று ஏறி, குளவிக்கூட்டை நெருங்குகிறான். வெள்ளைக்கூடு காவோலை ஒன்றிலே தொங்கியபடி காற்றில் மெல்ல மெல்ல ஆடுகிறது.

ஜனகன் ஏறிச்சென்ற ஏணி அப் புறப்படுத்தப்படுகின்றது. பனைமரத் தைச் சுற்றிப் பரப்பப்பட்ட காவோ லைகள் மீது எண்ணையைத் தெளிக் கின்றான் வித்தி.

ஜனகனை இருளில் அடையாளங் கண்டுகொள்ளமுடியவில்லை. ஏற்க னவே தன் இடுப்பில் சொருகிக் கொண்டு போன சிறுகல் ஒன்றை கீழே போடுகின்றான் ஜனகன். சரியான சமிக் ஞையைக் கொண்டு காவோலைக்கு நெருப்பு மூட்டப்படுகிறது. பனையைச் சுற்றிலும் தீ நாக்குகள் ஆளளவு உயரத்துக்கு எழுந்தன.

டக்... டக்... டக்...

காவோலை வெட்டப்படும் ஓசை. நால்வரின் முகங்களும் தீக்கொழுந்தில் பிரகாசிக்கின்றன. பற்றைக்குள்ளும்,

பனைமரங்களுக்குள்ளும் பதுங்கிக் கொள்கின்றனர்.

''தொம்''

காற்றைக் கிழித்துக்கொண்டுவந்து பெருநெருப்புக்குள் வீழ்கிறது குளவிக் கூடு... அனைத்துக்குளவிகளும் தீயிலே சங்கமமாயின.

தீயின் சுவாலை மெல்ல மெல்லத் தணிந்தது.

பாதிப்பனைவரை இறங்கிய ஜனகனுக்காக மீண்டும் ஏணிசாத்தப்படுகின்றது. வெற்றி வீரனாய் இறங்குகிறான் ஜனகன். மூச்சு வாங்குகிறது அவனுக்கு. ஓடிச்சென்று முதுகிலே தட்டி வாழ்த்திவிட்டு அழைத்து வருகின்றனர்.

''ஆ......''

பனைமட்டையில் இருந்த நெருப்புத்தணல் ஜனகனின் குதிக்காலில் பட்டுவிட, வலியால் சத்தமிட்டான் ஜனகன்.

தீக்காயத்திற்கு தேன் பூசுவது நல்லது என்று தற்காப்புக்காய் வித்தியால் கொண்டுவரப்பட்ட தேன், சுடுபட்ட இடத்திற்குத் தடவப்பட்டது.

''என்ன ஜனகன் வலிக்குதே?''

''சீ, இதெல்லாம் ஒருவலியோ! இனி நிம்மதியா இந்த வெட்டையில நாங்கள் விளையாடலாம், எண்ட நினைவு நெஞ்சம் எல்லாம் இனிக்குதடா''

ஒருவர் பின் ஒருவராக, தங்கள் தங்கள் வீடுகள் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள், மன நிறைவோடு.

இனிப் புளியடிவெட்டை கலகலப்பாயிருக்கும். □□

**''இந்த நிலத்தின் நெஞ்சில் படுத்துறங்கும் மாவீரர்களின் கல்லறைகளில் இருந்து இந்த சுதந்திரப் பிரகடனங்களின் பேரொலி எழுகிறது. ஆறாயிரத்துக்கும் அதிகமான இலட்சிய வேங்கைகளின் சத்தியவாக்காக இந்த விடுதலை முழக்கம் கேட்கிறது. இந்த விடுதலை முழக்கத்தில் எழுச்சிகொண்டே எமது இலட்சியப் பயணம் தொடர்கிறது. இரத்தம் சிந்தும் அரசியலாக எமது போராட்டவரலாறு நீண்டு செல்கிறது. எமது விடுதலை இயக்கம் ஆரம்பமாகிய காலத்திலிருந்து இன்றுவரை, இந்த நீண்டகால இடைவெளியில் நாம் எத்தனையோ நெருக்குதல்களையும், சோதனைகளையும், ஆபத்துக்களையும் சந்தித்தபோதும் எமது அடிப்படையான அரசியல் இலட்சியத்திலிருந்து என்றுமே நாம் தளர்ந்ததும் இல்லை; தடுமாறியதும் இல்லை.''**

*—தமிழீழத் தேசியத்தலைவர்*
திரு. வே. பிரபாகரன் அவர்கள்

கவிதை

# எமது தாகம்

என் தோழ!
எரியுறும் தேசமெனினும்
அது எனக்கு வேண்டும்.

கொங்கிறீட் வனம்தேடி
உயிர்ப்புல் மேய அலையும்
இராட்சத வல்லூறுகள்
எனது மண்ணில் எரிஎச்சம்
இட்டாலும்;
குன்றாயும் குழியாயும்
சாம்பல் மேடாயும் அழிவுற்றாலும்
எனது சோலையும் அதனுள்
நிலவும் அமைதியும்
பாடும் பறவைகளும்
ஒரு நொடியில் சிதறினும்
எனது பாதம் அதில் பதியவேண்டும்;
எனது கரங்கள் அதில் தழுவவேண்டும்.

அன்று;
நானும் எனது தந்தையும்
உனது தம்பியும்
எங்கள் ஆற்றில்
வானைப்பார்த்து நீந்தினோம்.

இன்று;
அன்னியன்படகு போகிறது.
எனதும் சகதோழர்களதும்
குருதியும்
கூடவே சீறி கலந்து செல்கின்றது.

நாளை;
எங்கள் இனம்
சுதந்திரமாய் நீச்சலடிக்கும்;
அவன் ஓட்டமெடுப்பான்.

அதோ—
எனது தோழர்கள் எழுந்துவருகிறார்கள்.
கல்லறையிலிருந்தும்
புரட்சி கானம் வியாபிக்கிறது.
தோழர் கரங்களில்
மீண்டும் கனல் கக்கும் கருவிகள்!
அலையென ஆர்ப்பரிக்கும்
கடல்புறாக்களின் சிறகடிப்பும்
நீண்டுகொள்ள
எல்லைகளில் புலிக்கொடி உயரும்
சங்கநாதம் அதிரும்
ஏனெனில் என்தேசமென்பதனால்.

இத்தாவில் க. சிவராசா

கட்டுரை

# பூநகரியிற் கிடைத்த தடயங்கள்

□ சேயோன் □

"அது நமது பூநகரி; ஆரவன் பாதகன்?
அவனுடைய முதுகொடிய
மோதுவம் மோதுவம்".

என்று பாடிப்பாடி வெற்றி கொண்டாடக் கூடிய ஒரு சூழ்நிலை இப்பொழுது தோன்றியுள்ளது. மிக அண்மையிலே சரியாகச் சொல்லப் போனால், சென்ற மாதம் பதினொராந் திகதி, - ஈழத்தமிழரின் விடுதலை இயக்க வரலாற்றிலே ஒரு திருப்பு முனையாய் அமையத்தக்க நிகழ்ச்சிகள் சில நடந்தேறியுள்ளன. யாரும் அதிகம் கவனிக்காமல், கேட்பாரற்று நீண்ட நெடுங்கால மாய்வறிதே கிடந்த ஒருசிற்றூர், திடீரென்று உலக அரங்கிலே நடுமேடைக்கு வந்து சேர்கிறது. உலகச் செய்தியாளரின் நாவிலெல்லாம் வந்து பயில்கிறது. வானொலிகளும் தொலைக்காட்சிகளும் அதன் பெயரை உச்சரிக்கின்றன; செய்தித் தாள் தலைப்புகளில் அது முதலிடம் பெறுகிறது; முழிப்பாக இடம் பெறுகிறது! இவற்றுக்கெல்லாம் என்ன காரணம்?

பூநகரியில் நமது தற்கொடையாளர்களான தமிழ் மறவர்கள் தமது வலிமை அனைத்தையும் திரட்டி எடுத்து வேற்றவர்களை விரட்டி அடித்தனர். அந்த அடி தந்த அதிர்ச்சி தாங்காமல் அலறித்துடித்த எதிரி இன்னும் முனகிக் கொண்டுதான் இருக்கிறான். எப்படி எல்லாம் வஞ்சம் தீர்க்கலாம் என்று ஆராய்ந்து தனது ஆற்றாமையை அறியாய அழிப்பு வடிவிலே படைக்கலமேந்தாத அப்பாவிகள்மீது காட்டிக்கொண்டிருக்கிறான். அந்தத் துயர நிகழ்வுகளினூடும், தமிழர் தரப்பின் வெற்றிப் பெருமிதம் விம்மிப் பெருத்து மேலோங்கி நிற்கிறது; பட்டொளி வீசிப் பறக்கிறது.

இது பூநகரியின் புதிய புகழ்.

இதே பூநகரிக்கு, பழைய புகழும் ஒரு காலத்தில் இருந்திருக்கிறது. அங்கு நாகரிக முன்னேற்றத்தின் போக்குகளை இனங்காட்டக்கூடியபழமையான மக்கட்கூட்டமொன்று வாழ்ந்திருக்கிறது; அயல் நாடுகளுடன் தொடர்பு கொண்டு பொருள் பண்டங்களையும் வினை நுண்மைகளையும் விழுமியங்களையும் கொடுத்தும் வாங்கியும் வாழ்ந்த மக்கள் வாழ்ந்திருக்கின்றனர்; கோயில்களையும் குடியிருப்புகளையும் கட்டி, வணிகத்திலும் வேளாண்மையிலும் கைவினைகளிலும் ஈடுபட்டு முனைந்து முன்னேறும் முயற்சிகளிற் கவனஞ் செலுத்தியுள்ளனர்.

இவையெல்லாம், கண் துயின்று கிடந்து கண்ட கனவுகள் அல்ல; கற்பனைகளிலே தோன்றிய கட்டுக் கதைகளும் அல்ல.

ஆராய்ச்சித் துடிப்புள்ள பல்கலைக்கழக நிலையிலுள்ள ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து மேற்கொண்ட பல நாள் முயற்சியின் பலனாக உய்த்தறியப்பட்ட உண்மைகள், வரலாற்றுத்துறை முதுநிலை விரிவுரையாளர் திரு. ப. புஷ்பரட்ணம் அவர்கள் பூநகரியிலும் அதன் அயலிலுள்ள மண்ணித்தலை, நல்லூர், மட்டுவில்நாடு, ஈழலூர், வீரபாண்டியன் முனை, பல்லவராயன்கட்டு, வெள்ளாங்குள்ளம் ஆகிய இடங்களிலும் நடத்திய மேலாய்வுகளின் பயனாகக் கிடைத்த தரவுகள் மேற்படி உண்மைகளை நமக்கு உணர்த்தி வைக்கின்றன. இந்த மேலாய்வுகள் பெரும்பாலும் 1989 இலும், சிறுபான்மை அதற்குப் பின்னரும் நடைபெற்றன. பூநகரியிற் கிடைத்த தொல்பொருட் சான்றுகளால் ஊக்கம் பெற்ற நமது ஆய்வாளர் புஷ்பரட்ணம், பின்னர் அவற்றுடன் தொடர்புடைய தொல்லியல் எச்சங்கள் சாவகச்சேரியிலும் உள்ளமையை ஓர்ந்து கொண்டு, அங்கும் சில அகழ்வுகளைத் தொடக்கினார். சில அரிய தரவுகளைப் பெற்றுக் கொண்டார்.

இந்தத் தொல்லியல் எச்சங்கள், கட்டிட இடிபாடுகளாகவும், சுடுமண் ஓடுகளாகவும் பழங்காலத்துக் காசுகளாகவும், கல்லிற் பொளிந்தெடுத்த சிலைகளாகவும், உலோகச்சிலைகளாகவும் சாசனங்களாகவும், பிற பொருள்களாகவும் உள்ளன. இவ்வாறு கண்டறியப்பட்ட தொல்லியற் சான்றுகளை விவரித்து, அவற்றை விளக்கும் வகையிலே ஒரு நூலாக ஆக்கித்தந்துள்ளார் புஷ்பரட்ணம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடாக இந்த நூல் வந்துள்ளது. ½ கிறவுண் அளவிலே 214 பக்கங்களில், உயர்ந்த தாளில் அச்சிடப்பட்டுள்ள, இந்த நூலின் பெயர் 'பூநகரி-தொல்பொருளாய்வு' என்பது. ஏறத்தாழ 125 நிழற்படங்களையும் விளக்கப் படங்களையும் நிலப்படங்களையும் கொண்டது. தரமான தாளில் அச்சிடப்பட்டு, அழகும் நேர்த்தியும் பொருந்த அமைக்கப் பெற்றுள்ளது. இதன் வடிவும் தோற்றமும் மிகுந்த மனநிறைவு தருவனவாய் உள்ளன.

-II-

இவ்வாறு, தொல்பொருளாய்விலே கிடைத்த பொருள்களை மிகவும் நுணுக்கமாக ஆசிரியர் விவரித்துக்காட்டுகிறார். இந்த விவரிப்பு இப்பொருள்களின் தன்மையைச் செப்பமாகத் தெரிந்து கொள்வதற்குப் பெரிதும் துணையாய் அமைகின்றன. எடுத்துக்காட்டாக, மண்ணித்தலைச் சிவன் கோயிலில் எஞ்சியிருக்கும் பகுதிகளைப்பற்றி ஆசிரியர் எவ்வாறு வீவரிக்கிறார் என்று காண்போம்-

''ஏறத்தாழ 21' நீளத்தையும் 12½' அகலத்தையும் கொண்ட இச்சிவாலயம் கர்ப்பக்கிருகத்தையும் இதற்கு முன்னால் சிறிய அந்தராளத்தையும் கொண்டுள்ளது (படம் 51). இதன் கர்ப்பக்கிருகம் வெளிப்புறமாக 10½' நீளத்தையும் 12½', 8' 8'' உயரத்தையும் கொண்டுள்ளது. உட்புறமாக இது 6' நீள அகலத்தையும் 10' உயரத்தையும் கொண்டிருக்கிறது. கிழக்கு நோக்கிய இதன் வாசல், 4' 2'' உயரத்தையும் 3' அகலத்தையும் உடையது...... 3' தடிப்புடைய இதன் சுவர்கள் பெருமளவுக்குச் செங்கட்டிகளையும், பொளிந்த சிறிய முருகைக்கற்களையும் கடலிலிருந்து எடுக்கப்பட்ட கற்களையும் கொண்டு சுதையினாற் கட்டப்பட்டுள்ளன. கர்ப்பக்கிருக வாசற்பகுதி மட்டும் ஒரே நீளமான பொளிந்த முருகைக் கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.''

இப்படியான செவ்விய விவரிப்பு, இந்த ஆய்வுகள் எவ்வளவு சிரத்தையுடன் செய்யப்பட்டுள்ளன என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. (இங்கு தந்துள்ள நீள, அகல, உயரங்களை மீற்றர் சென்ற்றிமீற்றர் முறையிலே தராமல் அடி அங்குல முறையிலே தந்துள்ளமைக்கான காரணம் புலப்பட

வில்லை.) கட்டிட இடிபாட்டின் இன்றைய நிலையை இவ்வாறு பதிவு செய்து வைப்பது மிகவும் பயனுள்ள முக்கிய பணி என்பதில் ஐயமில்லை.

கட்டிடங்களை மாத்திரமல்லாமல், ஏனைய பொருள்களையும் அதாவது விக்கிர கங்கள், காசுகள், கெண்டி, சுங்கான்போன்ற வற்றையும் கூட இதே முறையில் நுணுக்க மாக விவரித்துப் பதிவு செய்திருப்பது சிறப் பாகும். சுடுமண் ஓடுகளிற் பொறிக்கப்பட்ட எழுத்துகளையும் அடையாளங்களையும் ஆங்காங்கு, இயலுமான வரை இனங்கண்டு விவரித்திருப்பது போற்றத்தக்கது. இவற்றி லிருந்து பெறத்தக்க அதிகபட்ச தகவல் களை அநுமானித்து அறிந்து குறிப்பிட்டுள் ளமையும் மனங்கொள்ளத் தக்கது. எனினும் இந்த அநுமானங்களையும் ஊகங்களையும் பற்றி நூலாசிரியரே குறிப்பிட்டுக் கூறும் ஒரு கருத்தும் கவனிக்கத்தக்கது. அவர் கூறுகிறார்-

''ஆயினும் பூநகரியில் எம்மால் கண்டு பிடிக்கப்பட்ட தொல்லியற் சின்னங்கள் அனைத்தும் பூரணமாக இந்நூலில் ஆரா யப்பட்டதாகக் கூறுவதற்கில்லை. அவ்வாறு ஆராய்வதற்குரிய வாய்ப்புகள் யாழ்ப்பா ணப் பல்கலைக்கழகத்தில் இருப்பதாகவும் கூறமுடியாது. தொல்லியற் சின்னங்களை விஞ்ஞானபூர்வமாக ஆராய்வதற்குரிய வாய்ப்புகளையும் வசதிகளையும் இப்பல்க லைக்கழகம் ஏற்படுத்திக் கொடுக்கும்போது பூநகரியிற் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியற் சின்னங்களை மேலும் ஆராய்வதற்குச் சந் தர்ப்பம் ஏற்படும் என நம்புகிறேன்.''

ஆகவே, விஞ்ஞான பூர்வமான ஆராய்ச் சிக்கு இன்னும் இடமுண்டு. அத்தகைய ஆராய்ச்சி, இப்பொழுது அறிந்து கூறப் பட்டவற்றைவிட மேலதிகமான, அல்லது வித்தியாசமான முடிவுகளுக்கும் நம்மை இட்டுச் செல்லக்கூடும். ஆகவே நாம் திறந்த மனத்துடன் இருத்தல் வேண்டும் என்னும் ஆய்வுமுறைக் கோட்பாட்டையும் மனத்தில் இருத்துவது அவசியமாகிறது.

இனி 'பூநகரி — தொல்பொருளாய்வு' என்னும் இந்த நூல், அண்மையிற் செய் யப்பட்ட மேலாய்வுகளின் விவரிப்பு என்ற குறுகிய வரம்புக்குள் நின்று விடவில்லை. அவற்றுக்கு அப்பாலும் செல்கிறது. கிடைத்த தரவுகளை, ஏற்கெனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட வரலாற்று முடிவுகளுடன் பொருத்திப் பார்த்து, ஒத்திசைவுகளையும் முரண்பாடுகளையும் வித்தியாசங்களையும் பகுத்துக் காண்பதற்கும் இந்த நூல் முயல் கிறது. அந்த வகையிலே, இலங்கையின் ஆதிக்குடிகள் பற்றியும் வெளிநாட்டு உறவு கள் பற்றியும் சில செய்திகளைத் தந்து அவற்றை விமரிசனஞ் செய்யவும் முற்படு கிறது. அவ்வாறு விமரிசிக்கும்போது, 1970 இலே கந்தரோடையில் நடத்தப்பட்ட அகழ் வாய்வுகளும், 1980 இல் ஆனைக்கோட்டை யிலும் அதைத் தொடர்ந்து களபூமி (காரை நகர்), வேலணை ஆகிய இடங்களிலும் நடத் தப்பட்ட அகழ்வாய்வுகளும் 'செறிவான பெருங்கற்காலப்பண்பாட்டுக்குரியதிராவிடர் குடியேற்றம்' குடாநாட்டில் இருந்து வந் துள்ளமையைக் காட்டுகின்றன என்று நூலா சிரியர் கூறுகின்றார். தமிழரின் பூர்விக வரலாறு தமிழ்ப் பிராந்தியங்களிலிருந்து வெளிக்கிளம்ப வேண்டும் என்னும் கருத் தைப் பூநகரியிற் கிடைத்த சான்றுகள் வலி யுறுத்துகின்றன என்றும் அவர் கூறுகிறார் இத்தொடர்பிலே அவர் தெரிவிக்கும் வேறு சில வரலாற்று முடிவுகளையும் நினைவு கூருதல் பொருத்தமாகும்.

''மகாவம்சம் கூறும் விஜயன் வருகை ஒரு கட்டுக்கதை; இலங்கையில் நாகரி கத்தை அறிமுகப்படுத்தியவர்கள் திராவிட மக்களே; சிங்களவர்களும் தென்னிந்தியா விலிருந்து குடியேறிய இடைக்கற்காலப் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களின் வழித்தோன்றல்களே.''

நூலாசிரியர் இந்தக் கருத்துகளுடன் உடன்படுகிறார் என்றே தோன்றுகிறது. இன்றுள்ள வரலாற்று அறிவு நிலையில் இந்த முடிபுகள் ஏற்புடையனவாய் இருத்தல் கூடும். ஆனால், பொதுமதியின் அடிப்படையில் நாம் சில கேள்விகளை வரலாற்று நிபுணர்களிடம் கேட்கலாம். அந்தக் கேள்விகள் இவை தான்-

இலங்கையின் ஆதிக்குடிகள், வேறெங்கேயோ இருந்துதான் வந்திருக்க வேண்டும் என்ற எடுகோளுக்கு என்ன அடிப்படை? ஒரு பிரதேசத்து மக்கள் அந்தப் பிரதேசத்திலேயே தோன்றியிருக்க முடியாதா?

இந்தக் கேள்விகளுக்குரிய மறுமொழிகள், வெளிப்படையான - மறுக்க இயலாத உண்மைகள் என்று நாம் கருதவில்லை. ஆகையினால் அவற்றுக்குத் தகுந்த விளக்கங்கள் தரப்படுதல் வேண்டும்.

அது ஒரு புறமாக, நாம் எடுத்து நோக்கும் நூலிலே, அதன் ஆசிரியர் புஷ்பரட்ணம் சில பெறுபேறுகளை முன்வைக்கிறார். அவை யாவை என அறிந்து கொள்ளாவிட்டால், அந்த நூல் பற்றிய இந்த அறிமுகம் பூர்த்தியாகாது.

* யாழ்ப்பாணத் தமிழரசின் தொடக்க காலத்தலைநகர் சிங்கை; அது வன்னிப் பிராந்தியத்தில் இருந்தது; பூநகரியே அதன் மையம். அந்தப் பழைய தமிழரசு சோழர் ஆட்சியுடன் நெருங்கிய தொடர்பு பெற்றிருந்தது. அதன் வழிவந்த வன்னிச் சிற்றரசுகள் ஆங்கிலரை எதிர்த்தும் போராடின.

* தென்னியங்குளத்திலுள்ள அழிபாடுகள் சிங்கை நகருடன் நெருங்கிய தொடர்புடையன ஆகலாம்.

* நல்லூரில் எழுந்த ஆரியச்சக்கரவர்த்திகளின் அரசுக்கு முன்னரே கலிங்கமாகன், சாவகன், சாவகன் மைந்தன், பாண்டியப் பிரதானிகள் ஆகியோரின் அரசாகச் சிங்கையே விளங்கியது எனலாம்.

* இவ்வரசின் தோற்ற காலத்தைச்சோழர் காலத்துடன் தொடர்பு படுத்தலாம்.

இவையே நூலாசிரியர் சென்றடையும் பெறுபேறுகளின் பொழிப்பாகும். இவை மேலும் ஆராய்வதற்கு உரியன என்பதை நூலாசிரியர் ஒப்புக்கொள்ளுகிறார்.

## -III-

ஈழத்தமிழ் மக்கள் வரலாற்று மரபில்லாத அநாதைகளோ அகதிகளோ அல்லர். அவர்களுடைய வரலாறு சரியான பதிவுகளும் சான்றுகளும் இல்லாத நிலையில், வெளிப்பட்டுத் தோன்றாமற் கிடந்தாலும், அயராத தேடலும் அக்கறையுடன் கூடிய முயற்சியும் நல்ல பயன்களைத்தரும். இதனை நாம் உணர வேண்டும்.

நமது வரலாற்றை இயலுமளவு நிச்சயமாகத்திடப்படுத்தி உறுதி செய்வதில் நாம் சோர்வுபடுதல் கூடாது. அவ்வித சோர்வானது நமக்குக் கிடைக்கக்கூடிய கொஞ்ச நஞ்சமான சான்றுகள் கூட நமது கைகளுக்கு எட்டாது அழிந்து போவதற்கு வழிவகுத்து விடும்.

இந்த உண்மையை நன்குணர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டுவரும் ஆசிரியர் புஷ்பரட்ணமும் அவர்தம் உதவியாளர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். அவரது ஆய்வு நூல் மனமுவந்து வரவேற்கப்பட வேண்டியது.

நமது எண்ணத்திலே பூநகரியின் பெயர் மேலோங்கி மிளிரும் இந்தக் காலகட்டத்தில் இந்தப் புத்தகம் வெளிவருவது, சாலவும் பொருத்தமாகும். □□

கவிதை

# முகம் முறிக்கும் எதிர்காற்றை...

நிலவு எழத் தொடங்கி
நீள் பொழுதும் சேர் உறவாய்
இளகி...வயல் வெளிகளில் — ஏர்
இசைகள் எழ சூடடித்து
நிமிருகிற விடியல் ஒளி
நிறந்தீட்டும் நெற்குவியல்
அழகில் களைதீர்ந்த
ஆனந்த நினைவுகளை...

ஓலையும் தேய்ந்து - ஒழுக்கில்
உதிரும் மண் குடிசையாக
நோயுறும் தந்தை தாயின்
நுரையெழு கவலையாக
நினைவுகள் சுமந்த நாளின்
நரைவிழு தங்கையாக...

ஓடுநீர் ஊறிக்-காய்ந்து
உடைகின்ற வாய்க்காலாக
ஆடலும் பாடலும் - உண்மைத்
தேடலும் காதலும் வற்றிப்
போகும் என்னுயிரை-காணும்
பொழுதில் நான் வெறுமையாக...

புழுதி படிந்தெனது
புத்தகத்து மேசையிலே
புகையில் முகம் கறுத்து
புதுவிளக்கும் தூங்கையிலே...

இருந்து படிக்க எண்ண
இல்லைகளின் குரல் துரத்த
எழுந்த அறை வெளியே
நான்...ஏன்...?

எறிகணையும் கேளாது
ஏதோ ஒலி பெருக்கும்
ஊரின் சிறு கோயில்
இரவுவிழா ஒளி - தாம்
வானத்தை கண்டதுவாய்
வலியச் சிரித்தழைக்க...

தாய் மனை சொந்தம் ஊரை
தன் ஆசை அயலை விட்டு
போர் முனைப் பூவாய் - முன்னே
போனவர் என் கண் முன்னே...

நீள் குருதிப் பாத
நினைவுத் தடங்களென
புன்முறுவலோடும்...
புகைப்படமாய் என்தெருவில்...

என்னை எதிர்பார்ப்பதுவாய்
எங்கே பயணம் என
என் மனதைக் கேட்பதுவாய்
கண்கலங்க ஊரின்
கதைகளினை கேட்பதுவாய்...
நெஞ்சினுள் ஆழமாக
நினைவு உலைகொதிக்கும் ..!


அங்கங்களை இழந்தும்
அடுத்தகணம் நிமிரும்
எங்கள் தலைமுறையின்
ஏற்றம் இருள் துரத்தும்...

உழக்கிய அடியில் - மண்ணை
உடைத்தெழு பயிராய் - நெஞ்சை
நிமிர்த்தெனும் நாளிதாக ..
நினைவு முன்னேறிப் போகும்...

இலை கிளை அசைவதாக...
இடை அரும் பெழுவதாக ..

☐ நா. சிவசிதம்பரம் ☐

சிறுகதை



# தடுமாற்றம்

நேரம் ஒரு மணி இருக்கும். எனக்கோ, சரியான பசி. சிற்றுண்டிச்சாலை ஒன்றுக்குள் சென்று இருக்கையில் அமர்ந்தேன். சாப்பிட்டபின் உணவுக்கான கட்டணத்தைச் செலுத்த முற்பட்டேன்; அப்போது, எனது மேசையில் உடனிருந்தவன் எழுந்து நின்றான்.

''சேர், உன்னை விரும்பாதவர்கட்கு மத்தியில் பிடிவாதமாக உன் சகவாசத்தை வைத்துக்கொள்ள விரும்புகிறாயா?'' என வினவினான்.

''இல்லை, நான் இங்கு சாப்பிடவே வந்தேன்''

''இது சமூக சமத்துவத்தை வலியுறுத்தவே செய்யப்பட்ட செய்கை என நீ எச்சரிக்கை அடையவில்லையா?''

''சேர், அப்படி எதுவுமே இல்லை. இது பசிதான். அதனாலேயே இங்கு சாப்பிட்டேன்''

''அன்றைய வேலைகள் எல்லாம் முடிவுற்ற பின்பு, இசைஅரங்கு ஒன்றை நாடிச் சென்றேன். எனது இருக்கையில் அமர்ந்ததும், ஏற்கெனவே பக்கத்து நாற்காலியில் இருந்த சீமாட்டி கூனிக்குறுகுவதைக் கண்டேன். அவள் அங்கிருந்து விலகிப் போய்விடவேண்டும் என்ற மனநிலையில் இருந்தது தெரிந்தது.

''மன்னிக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்'' என்றேன்.

''நீ வேண்டப்படாத இடத்தில் இருப்பதை இட்டு சந்தோசம் அடைகிறாயா?'' என, வேண்டாவெறுப்பான குரலில் கேட்டாள்.

''அப்படி எதுவுமே இல்லை'' எனக் கூறினேன்.

''சரி, ஆனால் நீ இங்கு வேண்டப்படும் ஒருவனல்ல!''

*டொக்டர் வில்லியம் எட்வேட் புறுகாடிற் டியூ பொயிஸ் (1868 — 1963): அமெரிக்க சிவில் உரிமை இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படுபவர். கறுப்பினத்தவர்களின் முன்னேற்றத்துக்கான தேசிய அமைப்பு (N-A-A-C-P) உருவாக முன்னின்று உழைத்தார். 'ஒன் பீயிங் கிரேசி' என்ற தலைப்பில் எழுதப்பட்ட இச் சிறுகதை 1907 இல் பிரசுரிக்கப்பட்டபின், பல முக்கிய சிறுகதைத் தொகுப்புகளில் இடம்பெற்றுள்ளது. 1963இல் கயானாவில் 'பொயிஸ்' மரணமடைந்தார்.*

*தமிழில் - சு. மகேந்திரன்*

எனக்கு ஆச்சரியமாய் இருந்தது.

''நீங்கள் பிழையாக எடுத்துக்கொண்டு விட்டீர்கள். நிச்சயமாக எனக்கு இசையில் அதிக பிரியம். அத்துடன் இசையும் கூடத்தன்னை நான் ரசிப்பதை விரும்பும் என்ற நினைப்பு, எனக்கு மிகுந்த களிப்பைக் கொடுக்கக்கூடியது'' எனக் கூறினேன்.

அவள், ''காவலாளியே[1] இது சமூகசமத்துவத்தைக் குறிக்கிறது என நினைக்கிறாயா?'' என்றாள்.

''இல்லைச் சீமாட்டியே, இதுதான் 'பீத்தோவானின்'[2] ஐந்தாவது சிம்பனியின் இரண்டாவதுஅசைவு'' என்றேன்.

இசைக்கச்சேரியின் பின், நான் ஏற்கெனவே எனது பெட்டி படுக்கைகளை அனுப்பி வைத்திருந்த பயணிகள் தங்கும் விடுதியை அடைந்தேன். அங்கிருந்த 'கிளாக்கன்' என்னைத் திட்டித் தீர்த்தான்.

''உனக்கு இங்கே என்ன வேண்டும்?''

''நான் சற்று இளைப்பாற விரும்புகிறேன்''

அவன், ''இது வெள்ளையருக்கான விடுதி'' என்றான். நான் சுற்று முற்றும் பார்த்தேன். இவ்வகையான பல நிற வேற்றுமைகள், மிகப்பெரிய அளவில் சுத்தம் செய்யப்படவேண்டி உள்ளன.

''எனக்கு உள்ளே செல்வதற்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை'' என்றேன்.

''ஆனால் நாங்கள் அதனை ஆட்சேபிக்கிறோம்'' என்றான் அவன்.

''ஏன் அப்படி?'' என நான் ஆரம்பிக்க, அவன் இடைமறித்துச் சொன்னான்......

''நாங்கள் 'நீக்ரோக்களை' அனுமதிப்பதில்லை. எமக்கு சமூக சமத்துவம் தேவையற்றதொன்று''

நான் யோசனையுடன் ரயிலை நாடிச் சென்றேன். ஓர் 'உறங்குபடுக்கை'யைப் பதிவுசெய்து 'டெக்சாஸ்' ஊடாகச் செல்ல நினைத்தேன். இந்த நகரத்தின் மேல் எனக்குச் சிறிது சலிப்பு ஏற்பட்டிருந்தது.

''உனக்கு, உறங்கு படுக்கை எதுவும் இங்கு ஒதுக்க முடியாது''

''இல்லை, நான் அதனை ஒரிரு தினங்களுக்கு வாடகைக்கு அமர்த்தவே விரும்புகிறேன்'' என்றேன்.

''டெக்சாசில் உனக்கு அதனை அவர்கள் விற்பார்கள். அது சமூக சமத்துவத்தைக் குறிக்கிறது என அவர்கள் நினைக்கிறார்கள்.''

''நீங்கள் செய்வது காட்டுமிராண்டித்தனமானது'' என்றேன். 'டெக்சாஸ்' வரை நடந்தே செல்வது எனத் தீர்மானித்தேன்.

நடந்து செல்லும்போது, இன்னோர் வழிப்போக்கனைச் சந்தித்தேன். என்னைக் கண்டவுடன், ரோட்டின் மறுபக்கமாக அவன் சென்றான். அங்கே ஒரே சேறும்சகதியுமாக இருந்தது. நான் அதற்கான காரணத்தைக் கேட்டேன்.

''அவன், ''நீக்ரோக்கள் அழுக்கானவர்கள்; அதனால்தான்'' என்றான்.

''சேறும் அழுக்குடையதுதானே'' என்றேன். அத்துடன், உன்னைவிட அழுக்குடையவனாக நான் இன்னும் ஆகவில்லையே!''

''ஆயினும் நீ ஓர் 'நீக்ரோ' இல்லையா? அது சரிதானே'' என்றான்.

''எனது பாட்டன் அப்படித்தான் அழைக்கப்பட்டான்''

அவன், ''அப்படியானால் சரிதான்'' என வெற்றிக் களிப்புடன் கூறினான்.

''நீ தென்பகுதியைச் [3] சேர்ந்தவனா?'' என, உறுதியான குரலில் இனிமையாகக் கேட்டேன்.

அவன் ''சந்தேகமில்லாமல்'' என உறுமினான்; ''அங்கிருந்து கொண்டு பட்டினியால் சாகிறோம்'' என்றான்.

''கட்டாயமாக, நீங்களும் நீக்ரோக்களும் சேர்ந்து பட்டினிக்கெதிராக வோட்டளித்து, அதனை அகற்ற வேண்டும் என்ற நினைப்பில் இருந்து, எனக்கு விடுபட முடியவில்லையே'' என்றேன்.

''நாங்கள் அவர்களை வோட்டுப்போட விடமாட்டோம்''

''ஏன் நீங்கள் விடமாட்டீர்கள்?''

''அவர்கள் வாக்குப் போடுவதற்கு உரிய அறிவு படைத்தவர்களல்ல''

''ஆயினும், பார்க்கும் போது நான் உன்னை விட அறிவு குறைந்தவனாகத் தோன்றவில்லையே'' என்றேன்.

''ஆயினும் நீ ஓர் நீக்ரோதானே!'' என்றான்.

''உண்மை. நீ என்ன நினைக்கிறாய் என்பது இப்போது நிச்சயமாகப் புரிகிறது''

அவன், ''மிகவும் சரி'' எனக் கூறினான். அதில் தொடர்ச்சியான ஆர்வம் செறிந்த, வெற்றித்தொனிக்குரிய அடையாளம் தெரிந்தது.

''மேலும், எனது சகோதரி ஓர் நீக்ரோவை மணம் புரிவதை விரும்பமாட்டேன்'' என்றான்.

நான் அவனின் சகோதரியைக் காணவில்லையாகையால், ''அவளே இல்லை என்று சொல்லட்டும்'' என, வெறுமனே முணுமுணுத்தேன்.

''கடவுள் ஆணையாக அவள் ஆம் எனக்கூறினாலும், அவளை மணக்க முடியாது'' என்றான்.

''ஆனால்..... ஆனால் நான் அவளை மணக்க விரும்பவில்லை'' எனப் பதில் அளித்தேன். அவன் தனிப்பட்ட முறையில் தாக்கியது, என்னைச் சிறிது நிலைகுலைய வைத்திருந்தது.

''ஏன் முடியாது'' என, இவ்வுரையாடலின்போது முன்பு இல்லாத வகையில் அவன் காட்டுக் கூச்சலான தொனியில் கேட்டான்.

''ஏனெனில், நான் ஏற்கெனவே மணமானவன்; எனது மனைவியைப் பெரிதும் விரும்புகிறேன்'' என்றேன்.

''அவளும் ஓர் நீக்ரோதானா?'' எனச் சந்தேகத்துடன் கேட்டான்.

''அவளது பாட்டி அப்படித்தான் அழைக்கப்பட்டாள்'' என, மறுபடியும் கூறினேன்.

''அப்படியாயின் நல்லது'' என வினோதமான முறையில், தொடர்பின்றிக் கத்தினான்.

நான் உரையாடலை, ஓர் முடிவுக்குக் கொண்டு வர நினைத்தேன்.

''நீ போகலாம். உனக்கா அல்லது எனக்கா புத்தித் தடுமாற்றம்'' எனத் தெரியவில்லை என்றேன்.

அவன், ''இருவருக்கும் தான்'' எனக் கூறியபடி, சேற்றுக்குள்ளால் துரிதமாக நடந்தான்.

அடிக்குறிப்புகள்:

1. அமெரிக்காவில் பெரும்பாலான காவலாளிகள் நீக்ரோக்களாக உள்ளதால், நீ வெளியேநிற்க வேண்டியவன் என்ற கருத்தில் கூறப்பட்ட சொல்.
2. பிரபல ஜேர்மனிய இசைக்கலைஞன்.
3. அமெரிக்காவின் தென் பகுதிகளில் நிற ஒடுக்குமுறை வடபகுதிகளில் உள்ளதைவிடத் தீவிரமானது. □□

கவிதை

# நெஞ்சம் நிமிர்த்த...

அன்பே!
நீ நிலவாய்த் தேய்வதாயும்
வீட்டில் அம்மா மயங்கிச் சரிந்தும்
அப்பா மனத்துள் வெடித்தும்
ஆச்சியோ நேர்த்திகள் தீர்த்தும் தவிப்பதாய்
நண்பன் சொன்ன கதைகேட்டு
நான் அழவில்லை.
அறியாமையை நினைத்துச் சிரித்தேன்.
அவர்கள்தான் 'அப்படி
புதுப்பூ நீயுமா இப்படி?

எனக்குள் பெரிதாய் பிரளயம் இல்லை
இங்கே எத்தனையோ என் தோழர்
கத்திக் குழறாமல்
கையிழந்தும், கால்விரலாற் படம் வரைந்தும்
கரண்டிபற்றிச் சோறுண்டும்
'மினி மி' க்கு ரவை நிரப்ப
கால்தந்தும் உதவுகின்றார்.

பார் இங்கே!
புலரப்போகும் புதுவிடியலுக்குப்
புது உணர்வின் பிறப்புக்களை...

என்றாலும் எனக்கோ ஒரு குறை
வெற்றிலைக் கேணியில்
வெற்றுவெளியில்
பற்றிப்பிடித்த 'பிறனோடு'
பாய்ந்தோடிப் பொருதியதும்
புல்லாவெளித்தரையில்
புயலாகப் புகுந்து
R. P. G. கொண்டு 'புல்டோசர்' நொருக்கியதும்
சங்கத்தார் வயல் வெளியில்
சகடையைச் சரிக்க,
குறிபார்த்த தோழருடன்

## வெளிச்சம்

வெடிதீர்த்து வென்றதுபோல்
மனம் நிறைய
மீண்டும் பொருகளத்தில் 'புலிகளின் தாகமென'
புதிதாய்ப் பறித்த துப்பாக்கியைத் தூக்கியெழ
இரு கரமுமில்லையே!

துயர்தானென்றாலும்
உனைப்போல் நிலவாய் நான் தேயவில்லை.
மீண்டும் புதுப்பயிற்சி, புதுமுயற்சி
கையிழந்தோர் காலிழந்தோர்
கரும்புலியாய்க் களம்புகுந்து,
கவசடாங்கி அத்தனையும்
வாய்பற்றி இழுத்து
வந்தாரெனும் சேதிவரும்
அன்று நான் இரு கண்ணிழந்து நின்றாலும்
உன் நெஞ்செழுச்சி நெருப்பெடுக்க
நிச்சயமாய் முன்வருவேன்
நீ காத்திரு!
அன்பே! இது
நிலாக்காயும் நேரமல்ல
ஈழநிலம் காக்கும் நேரம்
நீயும் விழித்தெழு!
வந்துவிடு!!

☐ த. அன்பழகன் ☐

"தார்மீக அடிப்படையில், நாம் ஒரு உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். எமது போராட்ட இலட்சியம் நியாயமானது. சர்வ தேச மனிதஅறத்துக்கு இசைவானது. எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள். தனியரசை அமைக்கும் தகுதி பெற்றவர்கள். சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் இந்த உரிமையை எவரும் நிராகரித்துவிடமுடியாது."

—தமிழீழத் தேசியத்தலைவர்
**திரு. வே. பிரபாகரன் அவர்கள்.**

சிறுகதை

# பிரளயம்

த. கலாமணி

'பிள்ளையாரே!'

உலை மூடியைக் கையில் எடுக்கும்போதே முத்துக் கிழவனின் நெஞ்சு ஓலமிட்டது.

தீன் உண்டு முடித்தானதும் உலைமூடியைக் கழுவி எடுத்து, சோற்றுப் பானைக்குள் நீரையும் ஊற்றி அதனை உலைமூடியால் மூடி வைத்துவிட்டு, படுக்கின்ற பாயைத் தட்டி விரிக்கின்றபோதும்....

'பிள்ளையாரே!'

இப்போது கொஞ்ச நாட்களாகவே இப்படித்தான்.

ஓரிடத்தில் ஓய்வாக உட்காரும்போதும், உண்ணும் உணவைக் கையில் எடுக்கின்றபோதும், படுக்கையைத் தட்டிவிரிக்கின்றபோதும்...... என முத்துக் கிழவனின் நாளாந்த கடமைகள் ஒவ்வொன்றின்போதும் அவனை அறியாமலே இந்த ஓலம் உள்ளொலித்துக் கொண்டுதான் இருக்கின்றது.

இந்த ஓலத்தைப் பற்றுக் கோடாகப் பிடித்துக் கொண்டுதான், அவன் தனது நாளாந்த கடமைகளைக்கூடச் செய்து வருகின்றான்.

மனித சஞ்சாரமற்று, சூனியப்பிரதேசமாகிவிட்ட இந்தக் கிராமத்தில் முத்துக் கிழவனுக்குப் பேச்சுத்துணைக்குக்கூட யார் இருக்கிறார்கள்?

அதனாலேதான் பிள்ளையாரையே துணைக்கழைத்து, வாய்திறந்தும் பல தடவைகளில் 'பிள்ளையாரே' என்று அவன் புலம்பவும் செய்கிறான்.

முத்துக்கிழவனிடத்தில் தான் என்ன அசாத்திய நம்பிக்கை! தன் ஓலத்திற்கு தன்பிள்ளையார் செவிசாய்க்கத்தான் போகின்றார் என்ற தனது நம்பிக்கையில் சற்றும் தளர்ந்து போகாதவனாக; அவர் கோயில் கொண்டிருக்கும் அத்திக்கு நோக்கி அடிக்கடி கை எடுத்துக் கும்பிடவும் செய்தான்.

பாயை விரித்தானதும் படுக்கப்போகமுன் தன் குடிலுக்கு வெளியே வந்து கிழக்கு நோக்கிப் பார்வையை எறிகையில், அமாவாசை இருளின் அந்தஹாரத்தில் தரவைவெளிகூடப் பூதாகரமாகத் தோன்ற... தன் நெற்றியில் கையை வைத்துஇருளையே துழாவி, அந்த இருளையும் ஊடறுத்துக் கண்டுகொண்ட காட்சியில் உள்ளம் உருக...... அவனை அறியாமலே அவனின் இரு கரமும் எழுந்து உச்சிக்குமேலே குவிகின்றன.

இன்று நேற்றல்ல, என்றோ இவனுக்குப் பழக்க

மாகிப்போன வழக்கம் இது. படுக்கைக்குப் போகும்முன் குளத்தடிப்பிள்ளையாரை வணங்காமல் முத்துக்கிழவனுக்கு நித்திரை வந்ததே இல்லை.

குளத்தடிப் பிள்ளையாரின் தூபிவிளக்கை ஒளியேற்றக்கூட அங்கு ஒருவரும் இல்லையே என்று நினைத்து அவன் மனம் வெதும்பினான். அவ்விளக்கின் ஒளியில் தூபியும் அதன் முடியும் இலங்கும் காட்சியைத் தன் மனக்கண்ணில் வரவழைத்துக்கொண்டு பிள்ளையாரை மானசிகமாகத்துதித்துத் தன்னுள் உருகவும் செய்தான்.

மானசிகமான இந்தத் தரிசனத்திலேயே உள்ளம் அமைதியுற, அந்த அமைதியுடனேயே முத்துக்கிழவன் மெல்ல நடந்து வந்து பாயில் சரிந்து கொண்டான்.

பகல் முழுவதும் ஓயாமல் வேலை செய்ததில் உடல் முழுவதும் ஒரே அசதி. ஆனாலும் உடலின் அசதி பாழும் மனத்திற்குத் தெரியவா போகின்றது. உடலின் அசதியையும் விஞ்சி அது விழித்துக் கொள்கிறது.

'இந்த நிலைமை எங்கே போய் முடியும்?'

அவனுக்கே தெரியாதது அது. ஒருவேளை குளத்தடிப் பிள்ளையாருக்குத் தெரிந்திருக்கக் கூடுமென்று அவன் நம்பினான்.

குளத்தடிப் பிள்ளையார் மீதான இந்த நம்பிக்கை என்றோ அவனுள் விதைக்கப்பட்ட ஒன்று.

முதுமை வந்தெய்தி உடல் தளர்ந்து நினைவுகள் மறந்து போகின்ற நிலையிலும், குளத்தடிப்பிள்ளையார் மீதான 'நம்பிக்கை வித்து' அவனுள் ஊன்றப்பட்ட காட்சி இன்றும் அவன் நினைவில் நிலைத்திருக்கிறது.

அந்தக் காட்சியை இன்றும் நினைவில் மீட்டுகின்ற போது, 'பிள்ளையாரே, பிள்ளையாரே' என்ற ஓலம் சிறிது சிறிதாக வளர்ந்து, 'அனே புள்ளையாரே' என்ற ஓலத்துடன் ஒன்றாகிக் கலந்து, அலை அலையாய் பொங்கிப் பிரவகித்து அவனின் செவிப்பறைகள் இரண்டையும் தாக்கி மோதிக்கொண்டுதான் இருக்கிறது.

தானும் தன்போன்ற சிறுவர்களும், மண்வெட்டிகளும் கடப்பாரைகளும் தாங்கி நின்ற ஆடவர் பக்கமாகவும், 'பிள்ளையாரே, அனே புள்ளையாரே' என்று ஓலமிட்டுக்கொண்டிருந்த பெண்கள் பக்கமாகவும் மாறி மாறி ஓடிய காட்சி மங்கலான நிழற்படம்போல் இன்றும் அவன் நினைவில் விரிகின்றது.

அந்தச் சிறுவர்களுக்கு அந்த நேரத்தில் அந்த நிலைமையின் தார்ப்பரியம் அவ்வளவாக விளங்காதுதான். ஆனால், சிறுவன் முத்துவுக்கு அதன் தார்ப்பரியத்தை அவனது அம்மா உணர்த்தியபோது அவனுக்கு அது விளங்கவே செய்தது.

அதன்பின் இன்றுவரை அந்தச்சம்பவத்தை எத்தனை பேருக்கு அவன் விளக்கமாக விபரித்திருக்கிறான்!

கதை கேட்டு நிற்கும் சிறுவர்களுக்கு பீடிகையுடன்கூடிய வீரதீரக்கதையாக; நாஸ்திகம் பேசுகின்ற இளைஞர்களுக்கு ஆண்டவனின் அற்புதத்தை உணர்த்தும் தெய்வீகக் கதையாக, ஊருக்குப் புதியவர்களுக்கு குளத்தடிப் பிள்ளையாரின் மகிமை கூறும் வரலாற்றுக் கதையாக .. என்றெல்லாம் அந்த ஒரே காட்சியையே வகை வகையாகவிபரிப்பதென்பது முத்துக்கிழவனுக்குக் கைவந்த ஒரு கலை.

பேரக்குழந்தைகளையும் அயல்வீடுகளிலுள்ளவர்களின் பிள்ளைகளையும் கூட்டிவைத்துக்கொண்டு கதைசொல்வதென்றால் முத்துக்கிழவனுக்கு அளவில்லாத ஆனந்தம். கதை

கேட்பதிலோ குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை. 'தாத்தா, தாத்தா' என்று முத்துக்கிழவனைக் கட்டியணைப்பதும் முத்தமாரி பொழிவதுமாக தம் அன்பையெல்லாம் கொட்டித் தீர்த்துவிடுவார்கள். அந்த மகிழ்ச்சிப் பரவசத்தில் அமிழ்ந்து முத்துக்கிழவன் புதுத்தெம்பும் உற்சாகமும் பெற்றுவிடுவான்.

இந்தத் தெம்பும் உற்சாகமும்தான் அவனை இயக்கிக்கொண்டிருந்தது என்று கூடச் சொல்லலாம்.

குழந்தைகளை நினைத்துக்கொண்டபோது முத்துக்கிழவனின் கண்களில் நீர் முட்டியது. 'அப்புறம், என்னாச்சி தாத்தா?' என்று நிவேதிக்குட்டி மழலையில் கேட்பது இன்னும் காதுகளில் ஒலிப்பதுபோன்ற உணர்வு. தன் உடலையே ஒருமுறை சிலிர்த்துக் கொண்டான்.

முத்துக்கிழவன் கதை சொல்லும் அழகே தனி அழகுதான். 'குழந்தைகளின் உலகம்' பற்றிய தெளிந்த அறிவு நிரம்பப் பெற்றவன் போல, குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டும் முறையிலேயே கதைகளைச் சொல்வான். கூடியிருக்கும் குழந்தைகள் எல்லோரையும் சுற்றிவரப் பார்த்துவிட்டு, யார் யாரெல்லாம் கதைகேட்க வரவில்லை என்று முதலிலேயே கணக்கெடுப்பான். 'மீனுக்குட்டியும் பானுக்குட்டியும் இன்றைக்கு வரேல்லையோ...... என்ன சோக்கான கதை... பாவம், அதுகள்' என்று சொல்லும்போதே பிள்ளைகள் ஆர்வம் மேலிட, 'கதையைச் சொல்லுங்கோவன் தாத்தா' என்று கெஞ்ச ஆரம்பிப்பார்கள்.

'அப்பிடியென்றால் அவையளையும் யாராவதொருவர் போய்க் கூட்டிக்கொண்டு ஓடிவாருங்கோ' என்று கிழவன் சொல்லி முடிக்கமுன் ஒன்றுக்கு ஒன்பது பேராய், 'வராதவர்களைக் கூட்டிவர என்று' ஓடுவார்கள்.

பிள்ளைகள் எல்லோருமே வந்துவிட்டார்கள் என்று உறுதியானதும் 'ராஜா — ராணிக்கதை' சொல்லும்பாணியிலேதான் குளத்தடிப்பிள்ளையாரின் கதையையும் சொல்ல ஆரம்பிப்பான்.

''முன்னொரு காலத்திலை இந்த இடமெல்லாம் ஒரே காடாய் இருந்தது. அந்தக் காட்டிலை முயல், குரங்கு, மான் என்று மனிசருக்குத் தீங்கு செய்யாத மிருகங்கள் வாழ்ந்தது .... அவை மட்டுமில்லாமல் கரடி, புலி, சிங்கம், யானை என்றெல்லாம் பல வகையான மிருகங்களும் இருந்துதாம்'' என்று சொல்ல ஆரம்பிக்கும்போதே கதைகளைக்கட்டத் தொடங்கிவிடும்.

காட்டு மிருகங்களின் பெயர்களைச் சொல்லும்போது ஒவ்வொரு சொல்லையும் அட்சரசுத்தமாக உச்சரித்து, அவ்வவற்றின் தன்மையைப் புலப்படுத்துமாற்போல் தன்னையே அம்மிருகங்களாக உருவகித்து, இடை இடையே அம்மிருகங்களின் குரல்ஒலிகளை எழுப்பி, அடர்ந்த காட்டையும் அதில் வாசஞ்செய்யும் மிருகங்களையும் ஒன்றாகச் சேர்த்து குழந்தைகள் ஒவ்வொருவர் நெஞ்சங்களிலும் ஒரு சித்திரமாகவே தீட்டிவிடுவான்.

'சிங்கம் என்ன செய்யும்?' என்று எல்லோரையும் கேட்டுவிட்டு, சிங்கத்தைப்போல் கர்ச்சித்து, 'ஆட்களைக் கண்டால் அப்படியே பாய்ஞ்சு பிடிச்சுத் தின்றுவிடும்' என்று பயந்து நடுங்கிச் சொல்லும்போது, நிர்மலன் உண்மையாகவே பயந்து கிறீச்சிட்டுவிடுவான். சில தைரியமான குழந்தைகள் 'சபாஷ் தாத்தா' என்று சொல்லிக் கைதட்டித் தாத்தாவுக்கு உற்சாகமூட்டுவதோடு நிர்மலனைக் கேலியும் செய்வார்கள்.

நிர்மலன், இயற்கையிலேயே பயந்த சுபாவமுள்

ளவன். தாத்தா கதை சொல்லச் சொல்ல, பயத்தில் தாத்தாவை நெருங்கி வந்து அமர்ந்துகொள்வான். தன் 'மகள் வயிற்றுப்பேரன்' பயந்தாங்கொள்ளியாக இருப்பதில் தாத்தாவுக்குச் சிறிது வருத்தம்தான். ஆனாலும் கதைகள் சொல்லிச் சொல்லியே அவன் பயத்தைப் போக்கிவிடலாம் என்ற நம்பிக்கை முத்துக்கிழவனுக்கு இருந்தது. உடனடியாகவே அந்தப் பயத்தைப் போக்கும் வகையில் அந்த நாட்டு ராசாவின் வீரதீரத்தைப் பற்றிச் சொல்லத் தொடங்கிவிடுவான்.

'இந்தக் கரடி, சிங்கங்களுக்கெல்லாம் அந்த நாளிலை இந்தப் பிரதேசத்தை ஆட்சிசெய்துவந்த ராசா பயப்பிடமாட்டார். தன் ஆட்சிப்பிரதேச எல்லைக்குள் இருந்த இந்தக் காட்டுக்கு அடிக்கடி வந்து கொடிய மிருகங்களை எல்லாம் வேட்டையாடிக் கொண்டு செல்வார்' என்று அந்த அரசனின் வீரப்பிரதாபத்தைக் கூறும்போதே, 'ராசாவைச்சிங்கம் ஒன்றும், செய்யாதா, தாத்தா?' என்று தயக்கத்துடன் நிர்மலன் கேட்பான்.

'ராசாவின் கையில் தான் வில்லும், அம்பும் இருக்குமே. குறிபார்த்து கரடி, சிங்கம் எல்லாவற்றையும் வீழ்த்திவிட்டு தன்னுடைய உடைவாளால் குத்திக்கொன்றுவிடுவார்?' என்று சொல்லும்போது, நிர்மலன் உட்பட பிள்ளைகள் யாவரும் புது உற்சாகம் பெறுவர். இந்த உற்சாகம் பிள்ளைகளிடம் எழுந்ததுமே குளத்தடிப்பிள்ளையாரின் மகிமையைப்பற்றி விஸ்தாரமாகவே முத்துக்கிழவன் விபரிக்கத் தொடங்குவான்.

''அடிக்கடி வேட்டைக்கு வந்துபோன ராசா இந்தக் காட்டை அழிச்சு, அதுக்குப் பக்கத்திலை ஒரு பெரிய குளத்தையும் வெட்டி, இந்தக் காடு இருந்த தாழ்ந்த நிலப்பகுதியிலை விவசாயம் செய்யலாம் என்று தீர்மானிச்சார். தன்னுடைய சனங்களைக்கொண்டு, இந்தக் காட்டின் ஒருபகுதியை அழிச்சு பயிர்செய்யக்கூடிய விவசாய நிலமாக்கினார் பக்கத்திலை, ஒரு பெரிய குளத்தை வெட்டுவிச்சு அந்தக் குளத்துக்கு ஒரு பெரிய அணையையும் கட்டுவிச்சார்''

குழந்தைகள் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பார்கள். 'அந்தக் குளம் எதென்று சொல்லுங்கோ பார்ப்பம்?' என்று கிழவன் கேட்கும்போது, 'தெரியும், தெரியும் .. குளத்தடிப்பிள்ளையாருக்குப் பக்கத்திலை இருக்கிற குளம் தான்' என்று எல்லோரும் ஒரே குரலில் கத்துவார்கள். முத்துக்கிழவனும் அவர்களுடன் சேர்ந்து குதூகலித்து, மீதிக்கதையையும் தொடருவான்.

''இந்தக் குளம் வெட்டப்பட்டாப்பிறகு, இந்த இடத்திலையும் சனங்கள் குடியிருக்க வந்தினம். இந்த நிலத்துக்கு அந்தக் குளத்திலையிருந்து தண்ணி பாய்ச்சிப் பயிர் செய்து சந்தோசமா வாழ்ந்தினம். இது ஒரு எல்லைக் கிராமமாய் இருந்ததாலை பையப் பைய பக்கத்துப் பிரதேசத்தைச் சேர்ந்த சனங்கள் சிலபேரும் இங்கை வந்து குடியேறிப் பயிர் செய்து ஒற்றுமையா வாழ்ந்து வந்தினம்... இதெல்லாம் இப்பிடி இருந்துவரேக்கை நான் உங்களைப்போலை சின்னப்பிள்ளையாய் இருந்த ஒருநாள் ..''

முத்துக்கிழவன் சற்று நேரம் முன்னாலுள்ள வெளியை வெறித்து நோக்கிவிட்டு மீண்டும் தொடர்வான் ..

''இந்தக் குளத்திலை தண்ணி நிரம்பி வழிஞ்சுது. எந்த நேரத்திலையும் அணைக்கட்டு உடைப்பெடுத்துப் போடுமோ என்று சனங்கள் எல்லாம் பயந்தினம்... எங்கடை கிராமத்தையும் மீதியாயுள்ள காட்டுப்பகுதியையும் ஒரே

நீளத்துக்கு குளத்திலையிருந்து பிரிச்சு அணைக்கட்டு இருந்துது. கிராமத்தையும் காட்டையும் பிரிக்கிற எல்லையிலை அணைக்கட்டுக்கு ஓரமாய் இருந்த ஒரு அரச மரத்துக்குங்கீழை ஒரு கல்லுப்பிள்ளையாரும் இருந்தார். பிள்ளையாருக்கு வடக்குப் பக்கமாய் இருந்த அணைக்கட்டின்ரை ஒரு பகுதியிலை நிலம் வெடிச்சு நீர் கசிஞ்சுது. அந்த இடத்திலை அணை உடைப்பெடுத்துதெண்டால் குளத்து வெள்ளம் முழுக்க எங்கடை கிராமத்துக்குள்ளை வந்து எங்கடை வீடுகளையும் பயிர்களையும் அழிச்சு சனங்களையும் அள்ளிக்கொண்டு போயிடும். ஒருவருக்கும் முதல்லை என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை...''

முத்துக்கிழவன் கதை சொல்வதைச் சற்று நிறுத்திச் சுற்றுமுற்றும் பார்ப்பான். பிள்ளைகள் மலங்க விழித்தபடி உறைந்துபோயிருப்பார்கள். விட்ட இடத்திலிருந்து முத்துக்கிழவன் தொடருவான்...

''சனங்கள் எல்லாம் குஞ்சு குருமானுகளையும் இழுத்துக்கொண்டு ஓடி வந்து அரசமரத்தடியிலை குவிஞ்சிட்டினம். அரச மரத்துக்குத் தெற்காலை, காட்டெல்லைப் பக்கமா அணையை வெட்டிவிட்டால் வெ்ளளம் எல்லாம் காட்டுக்குள்ளை போயிடும் என்று சில ஆம்பிளையள் சொல்லிச்சினம்...... அந்த இடத்திலை அணை மிகப் பெரிசாய் இருந்ததாலை அதைச் சிலர் மறுத்தினம். காட்டுப் பக்கமா இன்னுஞ் சற்றுத் தள்ளியிருந்த இடத்திலை அணைக்கட்டுக் கொஞ்சம் அகலம் குறைஞ்சிருந்ததாலை மண்வெட்டியளும் கடப்பாரையளும் கொண்டு அந்த இடத்திலை வெட்ட ஆரம்பிச்சினம்... ஒருநாள் முழுக்க வெட்டியும் அணைக்கட்டின்ரை அகலத்திலை நூறிலொரு பாகத்தையும் வெட்டி முடிக்கேல்லை .. அணை சிறிசாக உடைப்பெடுத்துக் கொண்டிருந்த இடத்திலை நீர்க்கசிவு மெல்ல மெல்லக் கூடிக்கொண்டு வர ஆரம்பிச்சுது. சனங்கள் எல்லாம் பிரளயம் தான் வரப்போகுதோ என்று பயந்திட்டினம்.''

'பிரளயம் என்றால் என்ன தாத்தா?' என்று கேட்டுச் சில குழந்தைகள் இடைமறிக்கும்போது, குழந்தைகளுக்கு விளங்குகிற முறையில் முத்துக்கிழவன் ஒரு சொல் ஆராய்ச்சியே நிகழ்த்திக் காட்டுவான். 'உலகத்திலை கொடுமையள் எல்லாம் நிறையிற போது இயற்கையே சீற்றம் கொண்டு உலகத்தை அழிக்கிறதுக்கு பெரிய வெள்ள மாத்திரண்டுவரும். இதைத் தான் பிரளயம் என்று சொல்லுறது' என்று சொல்லி முடிக்கும்போது, 'விளங்குது தாத்தா, கதையைச் சொல்லுங்கோ' என்று ஆர்வ மேலீட்டால் குழந்தைகள் கேட்பர். கதை தொடரும்...

''ஆம்பிளையளுக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை. தங்கடை முயற்சியிலை ஒரு பிரயோசனமும் இல்லை எண்டு கதைக்கத் தொடங்கிச்சினம். பெம்பிளையளுக்கு கொஞ்ச நஞ்சமிருந்த நம்பிக்கையும் போயிட்டுது. தங்களுக்கினி தெய்வந்தான் துணை என்று சொல்லி பெருங்குரல் எடுத்து அழத்தொடங்கீட்டினம் ..... அப்பதான் அந்த அற்புதம் நிகழ்ந்தது...''

குழந்தைகள் எல்லோரும் வைத்தகண் வாங்காமல் முத்துக்கிழவனையே பார்த்துக்கொண்டிருப்பர். எல்லோருடை நெஞ்சங்களிலும் 'அப்படி என்ன அற்புதம் நிகழ்ந்திருக்கும்?' என்று அறியும் ஆவல் நிறைந்திருக்கும். ஆனாலும், முத்துக்கிழவனின் கண்களில் சுரக்கும் நீர்க்கசிவைக் கண்டபின் எதனையுமே கேளாமல் தாத்தா சொல்லும் வரை பொறுத்திருப்பர். முத்துக்கிழவன் அந்த அற்புதக்காட்சியை மானசிகமாக

நினைவில் மீட்டி மெய் சிலிர்த்து, சிறிதுநேர மௌனத்தின்பின் அதே உணர்ச்சிப் பிரவாகத்துடன் சொல்வான்.

''எந்த இடத்திலை அணை அகலமாய் இருந்து தெண்டு முன்னை நினைச்சினமோ அந்த இடத்திலை, அரசமரத் தடிக்குப் பக்கத்திலை இருந்த அணைப்பகுதி திடீரென்று உடைப்பெடுத்துக்கொண்டு வெள்ளம் முழுவதும் காட்டுக்குள்ளை பாயஆரம்பிச்சுது... எல்லாரும் விறைச்சுப்போயிட்டினம். பிள்ளையாற்றை கருணைதான் இதென்று எல்லாரும் நம்பிச்சினம். காலகதியிலை எல்லாருஞ் சேர்ந்து அரசமரத்தடியிலை பிள்ளையாருக்கு ஒரு கோயிலும் கட்டிச்சினம்... அந்தக் கோயிலைத்தான் நாங்கள் இப்ப குளத்தடிப்பிள்ளையாரென்று சொல்லுறது...''

மூத்துக்கிழவனுக்கு மண்டையில் வலித்தது. நினைவுச்சுமையின் அழுத்தத்தில், நெஞ்சை என்னவோ செய்தது. கதை கேட்கக் குழந்தைகளும் இல்லாமல் தன் வாயும் வயிறும் இப்படி ஓய்ந்துபோயிருக்கிறதே என்று நினைத்து தன்னுள்ளேயே மறுகினான்.

குழந்தைகள் எல்லாம் அந்த மண்ணைவிட்டுப் பிரிய மனமில்லாமல், அலங்க மலங்க விழித்தபடி தாத்தாவையே பார்த்துப் பார்த்துப் பிரிந்து சென்ற காட்சி கண்முன் தோன்றி அவனுக்கு மயக்கத்தைத் தந்தது.

'தாத்தா, தாத்தா.... நீங்களும் எங்களோடை வந்திடுங்கோ தாத்தா' என்று பேரக்குழந்தைகள் எல்லாம் கெஞ்சிநின்றமையைக்கூட தன்னால் எப்படி உதாசினம் செய்யமுடிந்தது என்று நினைத்துப் பார்க்கின்றபோது அவனுக்கே அது மலைப்பாகவும் இருக்கிறது. தனது முடிவு பைத்தியக்காரத்தனமான தோ எனவும் அவன் எண்ணத் தலைப்பட்டான். 'ஏன் இந்த நிலைமை?' என்று எண்ணிப்பார்க்கின்றபோது ஐம்பது வருட காலச்சக்கரம் அவன் மனதுள் சுழன்றது.

தனது நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்ததாகக் கேள்விப்பட்டமை. நாட்டின் ஆட்சியாளர்களைத் தெரிவுசெய்வதற்கான வாக்குரிமை கிடைத்தமை ...அரசியலில் இனப்பூசல் வளர்ந்தமை..... ஒன்றாக வாழ்ந்த அக்கிராமமக்களிடையே நச்சு விதைகளை விதைத்து, இனரீதியாக அக்கிராமம் இரு பிரதேசங்களாகத் துண்டாடப்படுவதற்கு அரசு வழி வகுத்தமை.. தனது இனத்தின் சொந்த மண்ணைக்கூடச் சிறிது சிறிதாக ஆட்சியாளர்கள் ஆக்கிரமிக்கமுற்பட்டமை... ஆட்சியாளர்களின் அக்கிரமங்களை உணர்ந்தும் உணராதவர் போல், தன் இனத்து அரசியல்வாதிகள் காலத்துக்குக் காலம் பிணக்குகளை மறந்து ஆட்சியாளர்களுடன் சமரசமாகிப் போனமை... ஆட்சியாளரின் அடக்குமுறைக்கெதிராக இளையதலைமுறையினர் கிளர்ந்தெழுந்தமை.. தனது கிராமத்திலிருந்தும் இளைஞர் பலர் காணாமற்போனமை... காணாமற்போன இளைஞர் யாவரும் ஆட்சியாளருக்கு அச்சுறுத்தலாக அமைந்தமை. தேடுதல் என்ற பேரில் ஆட்சியாளரின் குண்டர்படையினர் அக்கிராமத்தில் அக்கிரமங்கள் விளைவித்தமை..... ஈற்றில், ஆட்சியாளரின் குண்டர்படை தமது பாரம்பரிய மண்ணில் நிரந்தரமாகவே நிலைகொள்ள இருக்கின்றதென அறிந்து, அக்கிராமத்தில் இனியும் இருக்க முடியாதெனத் தீர்மானித்தவர்களாய் கிராமமக்கள் அனைவருமே மூட்டைமுடிச்சுக்களுடன் அகதிகளாக வெவ்வேறு பிரதேசங்களுக்கு இடம் பெயர்ந்து போனமை....

முத்துக்கிழவனுக்கு அரசியல் ஞானம் அவ்வளவாக இல்லைத்தான். ஆனாலும் அவனுக்கு அனுபவம் கற்றுத்தந்தபாடம்ஏராளம்.

'நீ தனியா இங்கையிருந்து என்ன செய்யப்போறாயணை... அவங்கள் வந்தாங்களெண்டால் அடிச்சுக் கொன்றுபோடுவாங்களெல்லே' என்று முத்துக்கிழவனின் இரத்த உறவுகள் எல்லாம் வற்புறுத்திய போதிலும்கூட, தன்னுடைய முடிவில் அவன் உறுதியாகவே இருந்தான்.

இப்போது நினைத்துப் பார்க்கும்போதுகூட அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி தமது சொந்த மண்ணைத் துறந்து அகதிகளாக வெளியேறிய தன் இனத்து மக்கள் மீது அவனுக்கு வெறுப்பாகவும் வந்தது. இன்றைக்கோ நாளைக்கோ என்றிருக்கின்ற தன் உயிரைக்கூட தன் மண்ணிலேயே விட்டுவிடவேண்டும் என்ற ஓர்மம் முத்துக்கிழவனுள் சுடராகிக் கனன்றது.

'இந்த நிலைமை எங்கே போய் முடியும்?'

எவ்வளவுநேரம் உறங்கியிருப்பானோ தெரியாது! வாகனங்களின் இரைச்சல் ஒலியில் முத்துக்கிழவன் நிலைகுலைந்து எழுந்தான். கனரகவாகனங்களிலிருந்தும், பஸ்வண்டிகளிலிருந்தும் ஆயுதபாணிகளாய் வந்து இறங்குகின்ற குண்டர்களையும் காடையர்களையும் தட்டி இடுக்கினூடாகக் கண்டு, அலமந்து போனான். 'அடுத்து என்ன நிகழுமோ?' என்ற தவிப்பு அவனை ஆட்டிப்படைத்தது.

அந்தக் குண்டர்களும் காடையர்களும், அக்கிராமத்து வீடுகளையெல்லாம் ஆக்கிரமித்துக்கொண்டு, ஆர்ப்பரித்தவாறே தெருக்களில் 'உலா'வந்த காட்சி அவனைக் கிலி கொள்ள வைத்தது. முத்துக்கிழவனின் உறைவிடம் அக்கிராமத்தின் ஒரு தொங்கலில் அமைந்திருந்ததில், அவனின் குடிலைப்பற்றி அவர்கள் அவ்வளவு அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை.

முத்துக்கிழவனுக்குத் தன் குடிலுக்குள்ளேயே முடங்கிக்கிடப்பது சிறைவாசம் போல இருந்தது. நேரம் ஆக, ஆக கிழவனான தன்னை அப்படி என்ன செய்துவிடப் போகிறார்கள் என்று நினைத்தவனாய், காட்டுப்பக்கமாகத் தன் காலைக்கடனைக் கழிக்கச் சென்றுவந்தான்.

அவன் திரும்பிவரும் போதுதான் அவனை அவர்கள் கண்டிருக்கவேண்டும். அவனை நோக்கி ஒரு கூட்டம் இரைந்துகொண்டே வந்தது. முத்துக்கிழவன் தன் குடிலை நெருங்கமுன், 'மே இன்னவா ஹொறா' என்று சொல்லிக்கொண்டு ஒருவன் தன் முஷ்டியால் முத்துக்கிழவனின் நெஞ்சில் ஒரு குத்துவிட்டான். அதனைத் தொடர்ந்து, சூழநின்றவர்கள் எல்லோரும் தடிகளாலும் பொல்லுகளாலும் முத்துக்கிழவனைப் பதம் பார்க்கத்தொடங்கினர். முத்துக்கிழவன் மெல்ல மெல்ல மயங்கிச் சாய்ந்தான்.

முத்துக்கிழவனுக்கு நினைவு திரும்பியபோது தன் உடலை ஒருமுறை அசைக்க முயன்றான். உடலைச் சங்கிலிகொண்டு பிணைத்திருப்பது போல உணர்ந்தான். மண்டை 'விண் விண்' என்று வலித்தது. கண்களைத் திறக்கவே முடியவில்லை.

தனக்கு என்ன நடந்தது? என்று நினைத்துப் பார்க்க முயன்றான். தடியும் பொல்லும் கொண்டு அந்தக் காடையர்கள் தன்னைத் தாக்கியமை மெல்ல மெல்ல அவன் நினைவுக்கு வந்தது. உடனேயே மயக்கம் வருவது போலவும் இருந்தது.

தன் உடலெல்லாம் குளிர்வதை உணர்ந்தவன், பகீரதப் பிரயத்தனத்துடன் கண்ணை விழித்துப்பார்த்தான். மாலையாகி இருந்

தது. பெருமழை பெய்து ஓய்ந்திருக்க வேண்டும். நிலம் எல்லாம் ஒரே சேறும் சகதியுமாக இருந்தது. வெள்ள அலை இரைந்து கொண்டேவந்து அணைக்கட்டை மோதும் ஒலி அவன் காதுகளைக் குடைந்தது. சுற்று முற்றும் பார்த்த போதுதான், அணைக்கட்டின்மேல் படுத்திருப்பது தெரிய வந்தது. அவர்கள் தன்னை அடித்துமுறித்து விட்டு அங்கே கொண்டு வந்து போட்டிருக்கவேண்டும் என்று உணர்ந்தான்.

'இவ்வளவு நேரமாக இந்தச் சகதியில்தானா கிடந்தேன்?' என்று தன்னையே கேட்டுக்கொண்டவன், 'பிள்ளையாரே' என்று அரற்றிக்கொண்டு எழுந்து நிற்கமுயன்றான். கால்மூட்டுக்களில் வலித்தது. காலைத்தூக்கிவைப்பது சிரமமாக இருந்தது. பிள்ளையாரைக் கையெடுத்துக்கும்பிட விரும்பியவனாய் சிரசின்மேல் இருகைகளையும் குவித்து, தெற்குப்புறமாக நோக்கினான்.

உடனடியாகவே, 'ஐயோ' என்ற அலறல் அவனின் அடிவயிற்றிலிருந்து கிளம்பி அந்தச் சூனிய வெளியில் எதிரொலித்தது. முத்துக்கிழவனால் அவன் கண்களையே நம்பமுடியவில்லை. குளத்தடிப்பிள்ளையார் கோயிலின் தூபி முழுவதும் இருந்த இடமே தெரியாத அளவுக்கு கோயிற் கட்டிடங்கள் உடைக்கப்பட்டு, பாழடைந்த கட்டிடமாகக் கோயில் காட்சிதந்தது.

முத்துக்கிழவன் வெலவெலத்துப் போனான். தன் இரத்த உறவுகள் பிரிந்து போன வேளையிலும்கூட, அவன் இவ்வளவுதூரம் கதிகலங்கவேயில்லை.

பிள்ளையார் சிலையையும் உடைத்திருப்பார்களோ என்ற ஐயம் அவனுள் எழுந்து, அதனையாவது காப்பாற்றி எடுத்துச்செல்ல வேண்டும் என்ற வேகம் அவனுள் பிறந்தது.

இருள் கவியத் தொடங்கியிருந்தது. நன்றாக இருட்டுவதற்குமுன் பிள்ளையார் சிலையைத்தேடி எடுத்துவிடவேண்டும் என்று விரும்பியவனாய், கால்களை எட்டவைத்து நடக்க முயன்றான். தலையைச் சுழற்றிக்கொண்டு வந்தது. 'பிள்ளையாரே' என்ற முனகலோடு தன் உடலைச் சமநிலைப்படுத்தி முன்னேறினான்.

ஏழெட்டு அடிகள்தான் எடுத்து வைத்திருப்பான். கால் இடறி நிலைகுலைந்து வீழ்ந்தான். காலில் ஏதோ நச நசத்தது. கையால் தடவிப்பார்த்துக்கொண்டான். இரத்தம் கையோடு ஒட்டிக்கொண்டு பிசுபிசுத்தது. கூரான ஏதோ ஒன்று காலைக்கிழித்திருக்க வேண்டும். தன்வேட்டியின் ஓர் ஓரத்தைக் கிழித்துக் காலில் கட்டுப்போட்டுக்கொண்டான். காலில் வலிக்கத் தொடங்கியது. சற்று ஆற வேண்டும் போல இருந்தது.

இந்த ஆசுவாசமெல்லாம் சொற்பவேளைதான். மேலும் இருட்டிக்கொண்டு வருவதை உணர்ந்து, கிராமத்துப்பக்கமாக பார்வையை எறிந்தபோது பல இடங்களிலும் வெளிச்சங்கள் மின்னிடுவதைக் கண்டான். கறையான் புற்றெடுத்த கதையான தன் கிராமத்தின் நிலைகண்டு, அவன் நெட்டுயிர்த்தான். குளக் கட்டோரமாக அலை வந்து மோதி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது.

அக்கிராமத்தை விட்டு அகதிகளாகி வெளியேறிச் சென்ற தன் கிராமத்து மக்களின் நெடுமூச்செல்லாம், இந்நேரம் அனலாகிக் கனன்று பிரளயாக்கினியாய் மூண்டு வந்து சூழாதோ என்று அவன் அங்கலாய்த்தான்.

இந்த அங்கலாய்ப்பு அடங்குமுன், கிராமத்துப் பக்கமிருந்து சில ஒளிக்கீற்றுக்கள் அணைக்கட்டுப்பக்க

மாய் தன்னை நோக்கி நகர்ந்து வருவதைக்கண்டு, அப்போதைய சூழலின் ஆபத்தை உணர்ந்தான்.

மேற்கொண்டு எதனையும் சிந்திக்க விரும்பாதவனாக அவன் விரைந்து எழுந்தான். குளத்தடிப் பிள்ளையாரை நோக்கி ஓடத்தொடங்கினான். கெந்திக் கெந்தி ஓடுகையில் அவன் உடல் தள்ளாடியது.

குளத்தடிப்பிள்ளையார் கோயிலை நெருங்கியிருப்பான். அசதியும் பசியும் உடல் நோவும் சேர்ந்து, அவனின் தலை சுற்றியது. கீழே வீழ்ந்துவிடமுன் ஓட்டத்தை நிறுத்தி மெதுவாகத் தரையில் அமர்ந்துகொள்ள எண்ணி, கைகளைத் தரையில் ஊன்றிய போது, கல்லுப்போல் எதுவோ கைகளில் தட்டுப்பட்டது.

தட்டுப்பட்டபொருளைத் தன் இருகைகளாலும் தடவிப்பார்த்து அதன் பரிமாணங்களைக் கணக்கிட்டபோது அவனுக்குச் சர்வாங்கமும் நடுங்கியது. தலை உலாஞ்சியது. தன் இரு கைகளாலும் அதனை இழுத்தெடுத்துத் தன் நெஞ்சோடு இறுக அணைத்தவனாக முத்துக்கிழவன் நிலத்தில் சரிந்தான். □□

**கவிதை**

# போர்முகம் உன்னைப் பேர் சொல்லி அழைக்கிறது

தொன்று தொட்டு இன்றுவரை
உன்தோள் சுமக்கும் நுகத்தடிகள் -
அடிமைச்சகதிக்குள் உன்னை
அமுழ்த்துகின்ற பகைச்சதிகள்

துளிர்க்கின்ற தளிர்களெல்லாம்
சருகாகிக் கண்முன்னே
கருகி விழும் கோரங்கள்
துரத்தி உன்னைத் தொடர்கின்ற
துயரத்தின் சாபங்கள்

உயிரற்ற உடலங்கள்
ஊரெங்கும் ஓலங்கள்
நிலையற்ற உன்வாழ்வின்
அவலத்தை இதயத்தில்
நெருப்பாலே வரைகின்ற கோலங்கள்;

இப்படியாய்...
ஈரல் நடுங்க நீ இன்னும்
எத்தனைநாள் இடிசுமப்பாய்?

இருண்டுபோன உன்இருப்பில்
இன்னும் எத்தனைநாள் செத்தெழுவாய்.

விழி திறவாய் தமிழா!
கலங்கி உன் குலமழியும்
காலங்கள்-
கடந்துபோன இரவொன்றின்
கனவுகளாய் முடியட்டும்.
புலர்ந்து வரும் பொழுதில்
புதிதாய் நீ பிறந்துவிடு!

போர் முகம் உன்னைப்
பேர் சொல்லி அழைக்கிறது-
விடியல் உன்னை விசாரிக்கிறது;
விரைந்து வா! தமிழா!
வழிந்தோடும் குருதிக்கு
வரப்பு கட்டு!
உயிர் விதையை ஊன்று
நாளை உன் தேசம்
விருட்சமாய் நிமிரும். □□

□ உமா ஜிப்ரான் □

மதிப்பீடு

புதுவை இரத்தினதுரை அவர்களின்

# நினைவழியா நாட்கள்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

புதுவை இரத்தினதுரை என்றுமே மனுக் குலத்தை நேசிக்கின்ற ஒரு கவிஞர். இன்று நேற்றல்ல பல ஆண்டுகளாக மக்களுக்காகக் கவிதை புனைந்து வருபவர். என்றுமே பலமற்ற மக்களுக்காக அவர் குரல் கவிதைகளூடாக ஒலித்தது. ஆனால், பலமுள்ள அநீதிக்கு எதிராக அவருடைய குரல் இன்னும் பலமாக ஓங்கி ஒலித்து வருகிறது. தமிழ் மக்களுடைய பண்பாட் டுத்தளத்தை நன்கு விளங்கிக்கொண்ட கவிஞர் அவர். அவருடைய **நினைவழியா நாட்கள்** என்னும் கவிதைத் தொகுதி எண் பத்திரண்டு கவிதைகளுடன் அண்மையிலே வெளியிடப்பட்டது. தமிழீழத் தேசியத் தலைவருடைய வாழ்த்துரையுடன் இந்நூல் வெளிவந்துள்ளது. ''அவர் இந்த மண் ணைக் காதலிப்பவர். இந்த மண்ணின் மக்களை நேசிப்பவர். இந்த மண்ணின் விடுதலையை இலட்சியமாக வரித்துக்கொண் டவர். மண், மக்கள், விடுதலை என்ற முப்பொருளை மூலப்பொருளாக எடுத்து கலைப்பொருள் படைப்பவர். கவிதை அவ ரது கலைப்பொருள். அந்தக் கலையில் அவருக்கு இங்கு எவரும் நிகரில்லை'' என் னும் வாழ்த்துரைச் சொற்கள் எல்லோருக் கும் ஏற்புடையன. ''வாக்குமூலம்'' என் னுந் தலைப்பில் புதுவை தன்னுடைய




கவிதைத் தொகுதிக்குக் கவிதையிலேயே ஒரு முன்னுரை வழங்கியுள்ளார். கவிஞன்

எப்படி இருப்பான் என்று கூறும்போது புதுவை தன்னையே இனங்காட்டிக்கொள்கிறார்.

''ஊரின்,
உலகத்தின்,
தன்னினத்தின், மனுக்குலத்தின்
சோகத்தைத் தூக்கி மடியிலே கட்டுவான்.
வீரத்தை எடுத்து முடியிலே பதிப்பான்.
தன்னினம்
விடுதலைக்கு விலைகொடுக்கும் போது,
கவிஞனின் கவிதை
கைவாளாகக் கொள்கிறது.
பூக்களுக்கு ஏன் பூத்தோம் என்று -
புரியாது.
வாய்க்காலில் ஓடிவரும் நீருக்கு,
போகுமிடம் தெரியாது.
ஆனால் கவிஞனுக்குத் தன் பிறப்பின் -
அர்த்தமும்
போகும் வழித் தெளிவும்,
நிச்சயம் தெரியும்.''

இச்சொற்களை எம்முன்னே நிறுத்தும் கவிஞன் புதுவையன்றி வேறு யார்? இந்தக் கவிஞன்தான் இராசவீதியிலே ''சுப்பசொனிக்'' வீசிய குண்டாலே சதைக்கும்பமான ஒரு பள்ளிப்பிள்ளைக்குத் தந்தையாகி அந்தச் சோகத்தைத் தன் சோகமாக மடியிலே கட்டுகிறான் (பக். 84—86). இதே கவிஞன் தான்;

''கோட்டை அதிர்ந்தது!
கோட்டை அழிந்தது;
கொடியவர் பாசறை எரிந்தது ..''

என்று வீரத்தை எடுத்து முடியிலே பதிக்கிறான் (பக். 12).

வீரமும் சோகமும் மலிந்ததாக எங்கள் மண் இருக்கின்றது. எத்தனையோ இளையவர்கள் நடுகற்களாகி வருகின்றனர். சங்க காலத்திலே ஆண் வீரர்கள்தான் நடுகற்களாயினர். ஆனால், எங்கள் மண்ணிலே வீரப்பெண்கள் பலர் நடுகற்களாகும் விந்தை நடைபெறுகின்றது. இக்கல்லறைகளை, நடுகற்களைப் பாடுகின்ற கவிஞர்களிலே புதுவை இரத்தினதுரையை நான் முதற் கவிஞனாகக் காணுகின்றேன். *Elegies* எனப்படும் கல்லறைப் பாடல்கள் பாடிச் சிறப்புற்ற ஆங்கிலக் கவிஞரான *Gray* போன்று தமிழிலே புதுவையினுடைய கல்லறைப் பாடல்கள் அமைகின்றன. அவை நெஞ்சை உருக்குவன; உணர்வைத்தட்டியெழுப்புவன; வீரத்தை அடிப்படையாகக்கொண்டமைவன. இளஞ்செழியன் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டபொழுது, புதுவை;

நீயும், நானும் உன் அப்பனும்
ஒரே இலட்சியத்தையும்
ஒரே தலைமையையும்
ஏற்றுக் கொண்டவர்கள்.
''கட்டைக்காட்டு''ப் போரில்
நீ களப்பலியானாய்
''எல்லன்குளத்தில்'' உனக்குத் தீமூட்டிய
போது
பக்கத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்-
தேன்

அப்போது
உன் தாயழுதாள், தாயின் தாயழுதாள்
ஆனாலும் அப்பன் அழவில்லை,
அப்பனும் மகனும் போர்க்களம் நிற்பது
அதிசயமல்ல......
ஆனால்,
ஒரு புலி தன் புலிமகனுக்கு
சீருடையில் நின்று சிதை மூட்டியதுதான்
போராட்டத்தின் புதிய வடிவம்.

என்று பாடும்பொழுது மேற்குறித்த பண்புகளெல்லாம் இழையோடுகின்றன.

சோதியாவின் மறைவைப் பாடும் பாடல்களும் இவ்வாறுதான் அமைகின்றன:

சோதியா எனும் சோதி அணைந்ததா?
சொற்ப ஆயுளில் வாழ்வு முடிந்ததா?
ஊதி ஊதியே எங்களை மூட்டியே
உணர்வு ஏற்றிய காற்றும் கலைந்ததா?

தாதியாய், தந்தையாய், தலைவியென் -
றாகியே
தலைநிமிர்ந்து நின்றவள், தீயில், என்ற
சேதி வந்தெமை திடுக்கிடச் செய்தது
திக்கெலாம் ஒரு சோகம் கவிந்தது.

''பெண்விடுதலை பாடிய பூங்குயில்'' ஆகிய சோதியாவை ''ஊதி ஊதியே எங்களை மூட்டியே'' என்று கூறும்போது பாரதியின் ''உலை ஊதி உலகக்கனல் வளர்ப்பாள்'' என்ற சிந்தனையும் மனக்கண்முன் வந்து நிற்கின்றது.

புதுவையின் கவிதைகள் நெஞ்சுக்குள் ஊடுருவிச் சென்று நிமிர்ந்துநிற்க வைப்பன. பெரும்பாலான கவிதைகள் இப்படித் தட்டியெழுப்பும் பண்புடையன. நடைமுறை உண்மைகளை அப்படியே சுட்டிக் காட்டி, உணர்வை வளர்ப்பன; வீரநடை போடச்செய்வன. இத்தொகுதியின் முதலாவது பாடலையே சான்றாகக்காட்டலாம். காலடிபட்ட புல் மீண்டும் தலை நிமிர்ந்து நிற்கும் காட்சியைக் காட்டித் தமிழரின் தலையை நிமிர்த்தும் கவிஞன்,

யானையைக் கூட அடக்கினாள்,
''அரியாத்தை''
யாரிவள்?
உன் பூட்டி.
பூனைக்கண்ணோடு புகுந்த அந்நியனை
ஓட விரட்டினான் ஒருவன்.
யாரிவன்?
உன் பூட்டன்.
வேண்டும் உனக்கிந்த வீரம்
தமிழனே!
கூண்டைத் திறந்து குதித்து.வெளியே வா.

என்று வரலாற்றுண்மையை மனக்கண்முன் நிறுத்துகிறான்.

போராளிகளைப் பாடும்போது உணர்வெல்லாம் கொட்டிப் பாடுகின்ற போக்கினையே புதுவையின் கவிதைகளிலே காண்கின்றோம். துப்பாக்கி ஏந்திச் செல்லும் வயதில் மிக இளைய போராளியைப் பார்த்து,

உன் வயதில் நானென்ன சாதித்தேன்
ஒன்றுமில்லை......
ஒன்றுமேயில்லை.
கிட்டி அடித்தேன்
கிளித்தட்டு மறித்தேன்
வெள்ளையப்பா வீட்டு விளாத்திக்குக்
கல்லெறிந்தேன்.
நீயோ
கையில் துவக்கேந்தி
களத்திலே நிற்கின்றாய்
கொட்டும் மழையினிலும்
குறிபார்த்து நிற்கின்றாய்
தூங்காத விழியோடு 'சென்றி'க்கு -
நிற்கின்றாய்.

உன் பாதத்தைக் காட்டு
கால்களை முத்தமிட
கவிஞன் விரும்புகிறேன்.

வாஞ்சையுடனும், மதிப்புடனும், வியப்புடனும் கவிஞன் கூறுகிறான்.

புல், பூ, பூகம்பம் புதுவையின் கவிதைகளிலே அடிக்கடி இடம்பெறும் படிமங்களாக அமைகின்றன. புல்போன்று நாம் மிதிபட்டுப் போகும் அற்பர்களல்ல; மிதிபட்ட புல் மீண்டும் தலை தூக்கும் என்னும் நம்பிக்கையை ஊட்டும் படிமமாக, ''கூண்டைத்திற'' (பக். 1), ''தாயகத்தைக் காதல் செய்'' (பக். 61) ஆகிய கவிதைகளிலே புல் கையாளப்படுகின்றது. பூவும் பூகம்பமும் பெண்களோடு தொடர்பான படிமங்களாக அமைகின்றன.

''பூபதி'' அம்மா...
ஒரு பெண்ணின் பெயரல்ல
பூகம்பத்துக்குப் புதுப்பெயர்.''
(பக். 18)

''பூவிழி தீசுமந்தாடட்டும் — இங்கு

பூகம்பம் ஆரம்பம் ஆகட்டும்''
(பக். 45)

பூவும் எழுந்திங்கு போர்க்களம் போகின்ற
பூகம்ப நாடென்று கும்மியடி''
(பக். 46)

இவ்வாறு பூவாக இருக்கும் பெண்கள் போரா ளிகளாகப் பூகம்பம் ஏற்படுத்துகிறார்கள் என்ற உண்மையினை இந்தப் படிமம் மூல மாகக் கவிஞன் உணரவைக்கின்றான்.

செஞ்சோலைக்கீதமும், தேசியக்கொடிப் பாட்டும் இத்தொகுதியிலே இடம்பெறு கின்றன.

தான் நடந்துவந்த பாதையிலே ஏற் பட்ட தவறுகளையெல்லாம் நன்கு உணர்ந்து வந்த கவிஞன் புதுவை. அந்த நாட்களிலே,

''நாங்கள் 'சிவப்பு விடிய' லென்னும்
அந்தத் திருநாளை ஆவலுடன் பார்த் -
திருந்தோம்
பேதங்கள் அற்ற 'புரட்சி'க்காய்
நாங்களொன்றாய்
வேதங்கள் சொன்னோம் விடியாமற் -
போனது பார்''

என்று தங்களுடைய முயற்சி தோல்வியுற் றதைக்கூறி, தங்களைப் போல் அல்லாமல், இன்றைய இளைஞர்கள்,

எங்களைப்போல
நின்று கதைக்கவில்லை, நிறக்கொடிகள் -
ஏந்தவில்லை.
கட்சி அலுவலகக் காரியங்கள் பார்க்க -
வில்லை
அச்சகங்கள்
பிரசுரிக்கும் ஆலயங்கள் தேடவில்லை,
துச்சமென
இளமைச் சுகங்களையே வீசிவிட்டுப்
பிச்செறிந்து கொண்டு புறப்பட்டார்''
(பக். 134—135)

என்று கூறத்தக்க அளவிலே சிந்தனையும் செயலும் தம் தாயகமீட்புப் பணியிலே ஒன்றித்துள்ளனர். புதுவையின் கவிதை இவையாவற்றையும் உள்ளடக்கியது.

நினைவழியா நாட்கள் மானிடம்பாடும் கவிஞனுடைய கவிதைகளைக் கொண்ட தொகுதி. தன்மானம், மண்ணிலே கொண்ட காதல், அந்த மண்ணை ஆக்கிரமிக்க வரும் எதிரிக்கு எதிரான களமாடல், களத்திலே வீரமரணம் அடைந்தோரின் பெயரும் பீடும் பொறித்தல் என்பனவெல்லாம் புதுவை என்னும் கவிஞனின் கவிதைகளிலே நடை பெறுகின்றன. தமிழ்க் கவிதைக்கு மேலும் ஒரு மெருகூட்டும் தொகுதி இது என்பதில் ஐயமேயில்லை.

□□

**'வெளிச்சம்'**
கலை, இலக்கிய இதழ்

உருவாக்கம்:
**ஆசிரியர் குழு**

இதழ் அமைப்பு:
**இணுவையூர்**
**சிதம்பர திருச்செந்திநாதன்**

ஓவியம்:
**தயா**

அச்சு:
**ம. மரியதாஸ்**

வெளியீடு:
**விடுதலைப்புலிகள்**
**கலை, பண்பாட்டுக் கழகம்**

# பூநகரி நாயகர் நினைவாக ஒரு பாடல்

□ புதுவை இரத்தினதுரை □

**தொகையறா**

மழைமேகம் துளியாகிப் பொழிகின்ற காலம்
பகைவீடு துயில்கின்ற விடிசாம நேரம்
புலியாகிப் புயலாக புறப்பட்டுச் சென்றீர்
பூநகரில் நிலையான பகையாவும் வென்றீர்.

**பல்லவி**

வெற்றிபெற்றுத் தந்துவிட்டு நீருறங்கு கின்றீர்
விடுதலைக்கு முடிதரித்து விட்டுறங்கு கின்றீர்
பெற்றளித்த ஆயுதங்கள் போல்முழங்கு கின்றீர்
பூநகரி நாயகராய் நீர்விளங்கு கின்றீர்.

**சரணங்கள்**

வந்தபடைத் தளத்தினுக்கு தீயைமுட்டினீர் - பகை
வாசலிலே நீர்புகுந்து பேயை ஓட்டினீர்
விந்தையிது என்றுலகம் வியந்துரைத்தது - உங்கள்
வீரமதைக் கண்டுபகை பயந்தொழித்தது.

நாகதேவன் துறையினிலே காற்றாகினீர் - அந்த
ஞானிமடத் தளத்தினுக்குக் கூற்றாகினீர்
வேவுபடை வீரரென நீங்கள் புகுந்தீர் -பெற்ற
வெற்றிகளின் வேர்களிலே நீங்கள் விழுந்தீர்.

நெஞ்சினிலே உங்களுக்கோர் கோயில் அமைத்தோம் - கண்ணில்
நீர்வழிய நின்றுமக்கு மாலை தொடுத்தோம்
பஞ்சுநெருப் பாகிவரும் பகையை முடிப்போம் - பிர
பாகரனின் காலத்திலே ஈழம் எடுப்போம்.

# போராட்டக் களத்தில் பூநகரி ஒரு வரலாற்றுப்பார்வை

ப. புஸ்பரட்ணம்

சமகால உள்நாட்டு, வெளிநாட்டு மக்கள் தொடர்பு சாதனங்களில் முதன்மைப் படுத்தப்பட்ட செய்திகளில் ஒன்றாக பூநகரிச் சமர் இடம் பெற்றது. இச்சமரின் விளைவுகள் பற்றிய மதிப்பீடுகள் வெளி வந்து கொண்டிருக்கும் நிலையில் கடந்த கால இலங்கைத் தமிழர் வரலாற்றிலும், தமிழ் - சிங்களப் போராட்ட வரலாற்றிலும் பூநகரிப் பிராந்தியம்பெற்ற முக்கியத்து வத்தை ஆராய்வது இச்சிறு கட்டுரையின் நோக்கம் ஆகும்.

வடஇலங்கையில் கல்முனை தொட்டு ஆலடி வரையிலான ஒடுங்கிய நிலப்பரப் பினையும், நாகதேவன்துறை தொட்டு மாதோட்டத்தில் வட எல்லை வரையிலான மணல் நீட்சிப் பிரதேசத்தையும் கொண்ட பிராந்தியம் பூநகரி எனப் பொதுவாக அழைக்கப்படும். இலங்கையின் பெருநிலப் பகுதியையும், யாழ்ப்பாணக் குடாநாட்டை யும் இணைக்கும் தொடக்கவாயிலாக பூநகரி அமைந்திருப்பதனால் ஒரு பிராந்தியத்தில் இருந்து இன்னொரு பிராந்தியத்தில் ஏற் படும் அரசியல், பண்பாட்டுத் தாக்கங்களை முதலில் உள்வாங்கிக் கொள்ளும் இடமாக இப்பிராந்தியம் விளங்கி வருகின்றது. ஆதி கால வரலாற்றில் வெளிநாட்டு வர்த்தகத் தொடர்பால் யாழ்ப்பாணக் குடாநாடு சிறப் புற்று விளங்கினாலும் அரசொன்றைநடத்து வதற்கான நிலையான பொருளாதாரம் வன்னிப் பிராந்தியத்திலேயே இருந்துள்ளது. இதனால் பூநகரி யாருடைய ஆதிக்கத்திற் குள் இருக்கின்றதோ அவர்களாலேயே குடா நாட்டை ஆளமுடியும் என்ற நிலை காணப் பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சியிற் புதிய போக்கு வரத்துப் பாதைகள் அமைக்கப்படுவதற்கு முன்னர் குடாநாட்டிற்கும் இலங்கையின் பெருநிலப் பகுதிக்கும் இடையே மூன்று போக்குவரத்துப் பாதைகள் பயன்படுத்தப் பட்டன.

ஒன்று: கிளாலிக் கடல் நீரேரியூடான எழுதுமட்டுவாள் கட்டைக்காடு ஊடான கடல், தரைப் போக்குவரத்து.

இரண்டு: நாகதேவன்துறைக்கும் கச்சாய் துறைமுகத்திற்கும் இடையிலான கடற்பாதை.

மூன்று: பூநகரியில் உள்ள கல்முனைக் கும் கொழும்புத்துறைக்கும் இடையிலான கடல் போக்குவரத்து.

இப் போக்குவரத்துப் பாதைகள் ஆதி காலம் தொடக்கம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் வரை முதன்மை பெற்றிருந்ததற்கு வரலாற்று ஆதாரங்கள் பல காணப்படு கின்றன.

மேலும் பூநகரியின் மேற்குக் கடற் கரையோரமாக அமைந்த துறைமுகங்கள்

தமிழ்நாட்டிற்கு நேர் எதிரே மிகக் கிட்டிய தூரத்தில் அமைந்திருப்பதனால் தமிழ் நாட்டில் காலத்துக்குக் காலம் தோன்றி வளர்ந்த பண்பாட்டு அலைகளை முதலில் உள்வாங்கிக் கொண்ட இடங்களில் ஒன்றாக பூநகரி விளங்கிற்று. இதை உறுதிப் படுத்தும் வரலாற்றிற்கு முற்பட்ட காலத் தொல்லியற் சின்னங்கள் பூநகரியில் உள்ள கல்முனை, மண்ணித்தலை, வெட்டுக்காடு, பள்ளிக்குடா, ஈழஊர், வீரபாண்டியன் முனை ஆகிய இடங்களில் செறிவாகக் கண்டு பிடிக்கப்பட்டமை இங்கு நினைவு கூரத் தக்கன. வரலாற்றுத் தொடக்க காலத்தில் தமிழ் நாட்டுடன் ஏற்பட்ட கிரேக்க, ரோம, அரேபிய, சீனத் தொடர்புகள் சம காலத்தில் பூநகரியிலும் ஏற்பட்டிருந்ததற்கு உறுதியான பல தொல்லியற் சின்னங்கள் கிடைத்துள்ளன. கி. பி. முதலாம் நூற்றாண்டுக்குரிய கிரேக்கநாட்டவரான தொலமி என்பவர் வரைந்த இலங்கைப் படத்தில் குறிப்பிட்டுள்ள புதுக்கி என்ற இடம் பூநகரியையும், தலைக்கோரி என்ற இடம் பூநகரியிலுள்ள கல்முனையையும் குறிப்பதாக முதலியார் இராஜநாயகம் குறிப்பிட்டுள்ளார்.

வட இலங்கை வரலாற்றில் இவ்வாறான முதன்மை பெற்ற பூநகரி தொன்மையான தொடர்ச்சி குன்றாத தமிழர் நாகரிகம் வளர்ந்த பிராந்தியம் என்பதற்கும் அண்மையில் அங்கு பல சான்றுகள் கிடைத்துள்ளன. சங்ககாலத்தை ஒத்த திராவிடப் பெருங்கற்காலம் பண்பாட்டு மக்கள் செறிவாக வாழ்ந்ததற்கு நிறைவான பல ஆதாரங்கள் கிடைத்திருப்பதோடு, அப்பண்பாட்டு வழிவந்த மக்கள் இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பிருந்து தமிழையே தமது தாய்மொழியாகக் கொண்டிருந்தது என்பதற்குப் பல சான்றாதாரங்கள் கிடைத்துள்ளன. அண்மையில் அங்கு கிடைத்த சாசனம் ஒன்றை ஆய்வு செய்த தமிழ் நாட்டின் முதன்மைச் சாசன வியலாளரான மகாதேவன் அவர்கள் இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் சங்ககாலத்தை ஒத்த வேளீர் என்ற சிற்றரசர் பூநகரியில் ஆட்சி செய்ததாக தினமணி என்ற பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளார். அநுராதபுரத்தில் நாற்பத்தி நான்கு ஆண்டுகள் நீதி தவறாது ஆட்சி செய்த எல்லாளன் என்ற தமிழ் மன்னனின் சாதனைகள் பௌத்த மத வரலாற்றைக் கூறும் பாளி இலக்கியங்களில் ஓரம் காட்டப்பட்டுள்ளதாகக் கூறும் பாக்கர் என்ற ஆங்கிலேய அறிஞர், எல்லாளனின் சாதனைகளில் ஒன்று பூநகரியின் தென்னெல்லையில் உள்ள வவுனிக்குளம் எனக் குறிப்பிட்டுள்ளார். இதற்கு மேலும் ஆதாரமாக ஆதியில் இப்பிராந்தியத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்ததற்கான சின்னங்களை எடுத்துக் காட்டியுள்ளார்.

கி. பி. ஆறாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட பக்தியியக்கத்தின் விளைவால் இலங்கையில் பௌத்த, இந்து சமய வேறுபாடு தோன்றின. இதைத் தொடர்ந்து தமிழ்மக்கள் இராணுவ ரீதியிலும், நிர்வாக ரீதியிலும் தனித்து வாழ முற்பட்டனர். இக்காலத்தில் இருந்தே பூநகரியுள்ளிட்ட தமிழர் பிராந்தியத்தில் இருந்து (உத்தர தேசம்) அநுராதபுர அரசிற்கு எதிராக பல படையெடுப்புக்களும் கிளர்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் தமிழ் நாட்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்களில் இவ்விடங்களில் வாழ்ந்த தமிழ் மக்களும் இணைந்து சிங்கள அரசை ஒன்பதாம் நூற்றாண்டில் தோற்கடித்ததாக சூளவம்சம் என்ற நூல்கூறுகின்றது. இதற்கு பேராசிரியர் கே. எம். டி. சில்வா இக்காலத் தென்னிந்தியப் படையெடுப்பாளருக்குத் தமிழர் வாழும் பிராந்தியங்கள் முக்கிய படைத்தளங்களாக விளங்கியதே காரணம் என விளக்கம் கூறுகின்றார்.

கி. பி. பத்தாம் நூற்றாண்டில் சோழப் பேரரசு தமிழ் நாட்டில் எழுச்சியடைந்த போது, இலங்கைத் தமிழ்நாட்டு உறவு

ஊர்காவற்றுறை - பூநகரியூடாக இறுக்க மடைந்தது. இலங்கையைத் தமது மேலா திக்கத்தின் கீழ் கொண்டுவர விரும்பிய சோழர் அதற்கு முன்னோடியாக யாழ்ப் பாணம் தொட்டு மாதோட்டம் வரையி லான வடமேற்கு இலங்கையைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். இவ் விடங்களை முதலில் வெற்றி கொண்ட தன் மூலம் மேற்கில் இருந்து ஏற்பட்ட அராபிய வர்த்தகத்தை கட்டுப்படுத்தவும், அநுராதபுரத்தில் இருந்து சிங்கள அரசை வெற்றி கொள்ளவும் சோழருக்கு வாய்ப் பாகியது. இதனால் அநுராதபுரத்திலும், பொலநறுவையிலும் சோழர் ஆட்சி ஏற்பட முன்னர் வடமேற்கிலங்கையில் அவர்களின் மேலாதிக்கம் நிலைபெற்றது. இதைப் பூநக ரியில் சோழர் ஆட்சி, சோழர் நிர்வாகம், சோழக் குடியேற்றம், சோழப் பண்பாடு தொடர்பாகக் கிடைத்த தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

கி. பி. ஆறாம் நூற்றாண்டில் இருந்து, சிங்கள மக்களில் இருந்து இனம், மொழி, பண்பாடு என்பவற்றால் தனித்து வாழ முற்பட்ட தமிழ் மக்கள், சோழரின் எழுபத் தேழு ஆண்டுகால ஆட்சியில் (993-1070) இராணுவ ரீதியில் பலம் பெற்றதைத் தொடர்ந்து, பிரதேச ரீதியாகத் தனித்து வாழத் தொடங்கினர். இதற்கு சோழ ராட்சி தொடர்பான கல்வெட்டுகளும் பிற தொல் பொருட் சான்றுகளும் தமிழர்கள் செறிந்து வாழும் பிராந்தியங்களில் பெரு மளவு கண்டுபிடிக்கப்பட்டமை சான்றாகும்.

கி. பி. 1070ல் பொலநறுவையில் சோழரை வெற்றி கொண்டதன் மூலம் சிங்கள இனத்தின் விடுதலை வீரனாக முதலாம் விஜயபாகு இலங்கை வரலாற்றில் இடம் பெறுகிறான். பேராசிரியர் பரண விதான, விஜயபாகு இல்லாதிருந்தால் தற் காலத்தில் சிங்களவர் இருந்திருக்க மாட் டார்கள் எனக் கூறும் அளவிற்கு விஜய பாகுவின் வெற்றி உயர்த்தப்பட்டுள்ளது. ஆயினும் இவன்தன் அரசையும் பௌத்த மதத்தையும் பாதுகாக்கத் தமிழ்ப்படை வீரர்களையே நம்பியிருந்தான் என சூளவம் சமும், இவனால் வெளியிடப்பட்ட தமிழ், சிங்களக் கல்வெட்டுக்களும் கூறுகின்றன.

இவன் ஆட்சியில் பொலநறுவை அரசிற்கு எதிராகத் தமிழர்கள் மேற்கொண்ட படை யெடுப்பில் பூநகரிப் பிராந்தியம் தொடர்பு கொண்டிருந்ததாகத் தெரிகிறது. இவன் சிங்களத் தூதுவர்கள் சோழ நாட்டில் அவமதிக்கப்பட்டதற்குப் பழிவாங்கும் நட வடிக்கையாக பூநகரி மட்டுவில் நாட்டிலும், மாதோட்டத்திலும் வாழ்ந்த படை வீரரின் உதவியை தன் தூதுவர்கள் மூலம் வேண் டினான். அதை ஏற்க மறுத்த தமிழ்ப்படை வீரர்கள் அத் தூதுவர்களைக் கொலை செய்ததுடன், பொலநறுவை அரசிற்கு எதிராகப் படையெடுத்து தலைநகரைக் கைப்பற்றித் தீக்கிரை ஆக்கியதுடன் விஜய பாகுவின் சகோதரியையும், அவளது புதல் வர்களையும் சிறைப்பிடித்தனர். இதனால் விஜயபாகு பொலநறுவையில் இருந்து தென் னிலங்கைக்குத் தப்பியோடியதாகச் சூளவம் சம் கூறுகின்றது. இக்காலத்தில் சோழர் ஆதிக்கம் இலங்கையில் இல்லாதிருந்த போதும் சோழப்பேரரசை வெற்றி கொண்ட விஜயபாகுவின் அரசை இங்கிருந்த தமிழ்ப் படை வீரர்கள் வெற்றி கொண்டதன் மூலம் இராணுவ ரீதியில் பலம் பொருந் தியிருந்ததை இச்சம்பவம் காட்டுகிறது. விஜயபாகுவைத் தொடர்ந்து 12ஆம் நூற் றாண்டில் பொலநறுவையில் ஆட்சி செய்து கொண்டிருந்த முதலாம் பராக்கிரமபாகு தமிழ்ப்படை வீரரின் தயவையே நம்பியி ருந்தான் என்பதை அவன் ஆட்சியில் வெளி யிடப்பட்ட கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவன் பர்மா நாட்டின் மீது படையெ டுத்த போது வடஇலங்கையிலுள்ள பல்ல வங்கத் துறைமுகத்தில் இருந்து தமிழ் அதிகாரி ஆதித்தன் தலைமையில் பல நூற் றுக்கணக்கான கப்பல்கள் பர்மா நாட் டைச் சென்றடைந்ததாகச் சூளவம்சம்

கூறுகின்றது. இப் பல்லவங்கத் துறைமுகம் பூநகரியில் கடற்கரையோரமாக அமைந்த பல்லவராயன் - கட்டு என வரலாற்று ஆய் வாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர். 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டி நாட்டில் இடம்பெற்ற சோழ - சிங்களப் போராட்டத்தில், சோழர் சிங்களப்படை வீரரைத் தோற்கடித்தனர். இதனால் சோழர் இலங்கையில் சிங்கள அரசையும் வெற்றி கொள்ளப் படையெடுக்கலாம் என அஞ்சிய முதலாம் பராக்கிரமபாகு அப்படை யெடுப்பைத் தடுக்க பூநகரி மட்டுவில் நாட்டிலும் புலைச்சேரியிலும் தன் படை வீரர்களை நிறுத்தினான். இதையறிந்த சோழப்படைத் தளபதி பல்லவராயன் வட இலங்கை மீது படையெடுத்து, பூநகரி மட்டுவில் நாட்டிலும் புலைச்சேரி போன்ற இடங்களிலும் தங்கியிருந்த படைவீரர்களை வெற்றிகொண்டு இவ்விடங்களைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர் என தமிழ் நாட்டிலுள்ள திருவாலங்காட்டுச் சாசனம் கூறுகிறது.

13 ஆம் நூற்றாண்டில் வன்னியில் இருந்த தமிழ்அரசு யாழ்ப்பாணத்திற்கு இடம் மாறியபொழுது தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாண அரசிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்களைத் தடுத்து நிறுத்தும் முக்கிய பாதுகாப்புக் காவலரணாக பூநகரிப் பிராந்தியம் விளங்கி யது. யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் யாழ்ப் பாண அரசிற்கு வெளியே உள்ள நாடுக ளாகப் பூநகரியும், பூநகரிப்பிராந்தியத்தி னுள் அமைந்த பொன்னாவெளியும், பல் லவராயன்கட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பிராந்தியங்களில் இருந்தே யாழ்ப்பாண அரசின் வெளிநாட்டு வர்த்தகத்திற்கு அதிக வருவாயைக் கொடுக்கும் யானைகள் பிடிக் கப்பட்டதாகக் கூறப்படுகிறது. 15ஆம் நூற் றாண்டுக்குரிய கோகிலசந்தோஷய என்ற சிங்கள இலக்கியத்தில் யாழ்ப்பாண அர சைப் பாதுகாத்துக்கொண்டிருக்கும் விஷ்ணு ஆலயம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ் ஆலயம் பூநகரி ஈழ ஊருக்கு வடக்காக உள்ள பாலாவி என்ற கிராமத்தில் அமைந் துள்ளது. 1450 இல் கோட்டை மன்னர் சார்பாக செண்பகப் பெருமாள் யாழ்ப் பாண அரசு மீது படையெடுத்தபோது அவ னது முதலாவது படையெடுப்பு வன்னியின் எல்லைக் கிராமங்களைத் தாக்கிவிட்டுத் திரும்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது. அப் படையெடுப்பை எதிர் கொண்ட இடமாகப் பூநகரி விளங்கியது. இதை, பூநகரியிலுள்ள நாச்சிக்குடாவுக்கும் ஈழ ஊருக்கும் இடைப் பட்ட பிராந்தியத்திலுள்ள இடங்கள், செண் பகப் பெருமாள் படை தங்கிய இடங்கள் என்ற பெயரில் அழைக்கப்படுவது சான் றாக உள்ளது. செண்பகப் பெருமாளின் 2ஆம் படையெடுப்பு பூநகரியில் உள்ள கல் முனையில் இருந்து கொழும்புத்துறை ஊடாக யாழ்ப்பாணம் சென்றடைந்ததாக கோகில சந்தோஷய என்ற சிங்கள இலக்கி யம் மேலும் கூறுகின்றது.

17ஆம் நூற்றாண்டில் மன்னாரில் இருந்த போர்த்துக்கேய படைகள் யாழ்ப் பாண அரசை வெற்றிகொள்ள பூநகரியுட னான கடல், தரைப் பாதைகளைப்பயன் படுத்தினர். ஆயினும் ஆரம்பத்தில் பூநகரி யுடனான கடல் நீரேரியைக் கடப்பதற்கு யாழ்ப்பாண அரசு தடையாக இருந்தத னால் சங்கிலி மன்னனே அந்நீரேரியைக் கடப்பதற்கு உதவிபுரிந்தான் எனக் கூறப் படுகிறது. யாழ்ப்பாண அரசிற்குரிய வரு மானத்தின் ஒருபகுதி அதன் மேலாதிக்கத் திற்கு உட்பட்ட வன்னிச் சிற்றரசுகளிடம் இருந்து பெறப்பட்டதனால் வன்னியுட னான தொடர்பைத் துண்டிக்க பூநகரியைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கப் போர்த்துக்கேயர் முனைந்தனர். ஆயினும், போர்த்துக்கேயரின் மேலாதிக்கம் பூநகரி யின் மேற்குக் கடற்கரையோரமான ஈழ ஊர், வலைப்பாடு போன்ற பகுதிகளில் கூடியளவு ஏற்பட்டதாகத் தெரிகிறது. பெய ரளவில் யாழ்ப்பாண திசாவையின்கீழ் கட

மையாற்றிய அதிகாரி பூநகரியின் நிர்வாகத் திற்குப் பொறுப்பாக இருந்தாலும் பூநகரி யின் பொருளாதார வளமிக்க எல்லைக் கிராமங்கள் வன்னிச் சிற்றரசர்களின் மேலா திககத்தின் கீழ் உள்ளடங்கியிருந்தன.

போர்த்துக்கேயர் ஆட்சியைத் தொடர்ந்து வந்க ஒல்லாந்தர் ஆட்சியில் பூநகரி பலவகையிலும் முக்கியத்துவம் பெற் றது. இவர்கள் ஆட்சியிலேயே நெசவாளர் பலர் புதிதாகப் பூநகரியில் கொண்டு வந்து குடியமர்த்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இவர்கள் வன்னியையும் யாழ்ப்பாணத்தை யும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்தி ருப்பதற்கு வரலாற்றுப் பழமை வாய்ந்த பூநகரி மட்டுவில் நாட்டிற்குக் கிழக்கே கோட்டை ஒன்றை அமைத்தனர். ஆயினும் வன்னிச் சிற்றரசர்கள் ஒல்லாந்தரின் மேலா திக்கத்திற்குக் கட்டுப்பட மறுத்து ஒல்லாந் தரின் ஆணைக்கு எதிராகச் செயற்பட் டனர். ஒல்லாந்தர் குறிப்பு ஒன்று, பனங் காமத்து வன்னி அரசனான கயில வன்னி யன், ஒல்லாந்தரின் மேலாண்மையை ஏற்க மறுத்து சுதந்திரம் மிக்க இளவரசனாக ஆட்சிபுரிந்தான் எனக் கூறுகின்றது. இவன் ஆட்சியில் நெல் உற்பத்தியில் அதிக வரு மானம் கொடுக்கும் பூநகரியிலுள்ள பல்லவ ராயன்கட்டும், தியாகமும் வன்னி அரசர் களின் கட்டுப்பாட்டில் இருந்ததாக ஒல்லாந்தர் கால ஆவணங்கள் கூறுகின்றன. 1803 இல் ஆங்கிலேயரால் பண்டார வன் னியன் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து வன்னியும் பூநகரிப் பிராந் தியமும் முழுமையாக ஆங்கிலேயர் ஆதிக்கத் தினுள் அடங்கியது. இவர்கள் ஆட்சியில் தான் பூநகரியின் பரந்த நிலப்பரப்புக்கள் துண்டாடப்பட்டு துணுக்காய் போன்ற புதிய நிர்வாகப் பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டன. அத்துடன் வன்னியை தொடர்ந்தும் தமதுகட்டுப்பாட்டில் வைத்திருக்க பூநகரியில் ஒல்லாந்தர் கட்டிய கோட்டையைத் தமது மேலாதிக்கச் சின்னமாகப் பயன்படுத்தினர்.

1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந் ததைத் தொடர்ந்து வன்னிக்கும் யாழ்ப் பாணத்திற்கும் இடையிலான தொடர்பைக் கண்காணிக்க சிங்கள அரசுகள் பூநகரியி லுள்ள கோட்டையை முக்கிய காவலர ணாகப் பயன்படுத்தினர். இவ்வாறு நீண்ட காலம் யாழ்ப்பாணத்தையும், வன்னி யையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க பூநகரியையும், அங்கிருந்த கோட்டை யையும் அந்நிய ஆட்சியாளர்கள் ஒரு பாது காப்புத் தளமாகப் பயன்படுத்தினர். ஆனால் அண்மையில் பூநகரியிலிருந்த கோட்டை இடிக்கப்பட்டு, அந்நியரின் ஆதிக்கச் சின்னம் கடந்த கால வரலாற்றுச் சின்னமாக மாற்றப்பட்டுள்ளது. □□

*"நீதியின் அடிப்படையில், மனித தர்மத்தின் அடிப்படையில், சத்தியத்தின் அடிப்படையில், நியாயப்பாடு எமது பக்கமாக இருக்கும் பொழுது, நாம் எமது போராட்ட இலட்சியத்தில் உறுதிபூண்டு நிற்க வேண்டும். இலட்சியத்தில் உறுதிபூண்டு இறுதிவரை போராடும் மக்கள்தான் விடுதலையை வென்றெடுப்பார்கள்."*

—தமிழீழத் தேசியத்தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்.

☐ உதயலட்சுமி ☐

ஊதற்காற்று உரசிக் கொள்ளும்
கரிய இருள்கவிந்த
கானகம்
அந்தரிப்புகளில் கழியும்
அடர் இரவுகள்
நினைவு மூட்டத்தில்
உங்கள் உருவங்கள்
விழித்திரையில் மோதும்;
நினைவுகள் பொங்கித் தணியும்.

ஆடிச்செல்லும் படகும்
உலர்ந்த கோடை வெயிலும்
மூசிக் கொள்ளும் சோளகக்காற்றும்
உங்கள் நினைவுகளை
மீட்டுச் செல்லும்.

உதிர்ந்து போன
இலைகளல்ல நீங்கள்
ஒரு உதயத்துக்காய்
உங்களை உருக்குலைத்த
உருக்கு மனிதர்கள்.

காவல் நேரத்தில்மட்டும்
கண்விழித்துக் கொள்ளும்
உறவுகளின் நினைவுகளை
உதறித் தள்ளிவிட்டு
துப்பாக்கியை இறுகப்பற்றி
இலக்கைமட்டும் நினைத்த
இறுதிக் கணங்கள்...
நினைவுகளை மீட்டுப் பார்க்கிறோம்
வேதனை தாளமுடியாமல்
விழிகள் நனைந்து கொள்கின்றன.

எங்கள் வரலாற்றுக்கு
வழிகாட்டும்
தலைவனின் வார்த்தைகளை
இதயத்திற் பதித்தபடி
இறுதியாக களத்திற்கு
நடந்தபோது
எமது பாசறைகளில் படிந்த
உங்கள் பாதச்சுவடுகள்
இன்றும் அழியாதபடி
மனதிற் பதிந்து போன
ஓவியங்களாய் நீங்கள்...
எப்படி நினைத்துக் கொள்வோம்
நினைவுகளாக மட்டுமா நின்றீர்கள்?

நேற்று வந்த புதிய தோழிகளின்
கரங்களிலே தவழ்கின்ற
உங்களின் 'தோழமை'
உறுதியான பற்றலுடன்
ஆயத்தமாகும்
மிகுதிப் பயணங்கள்...

விழிசுமந்த உங்கள்
கனவுகளைச் சுமந்து
வழிமீது நடக்கிறோம்
புதிய தோழி எம் பின்னால் வருகிறாள்.

கவிதை



# புதிய தோழி எம் பின்னால் வருகிறாள்

நோய் நொடிகளின்றி
சுகதேகிகளாக வாழ்வதற்கு
கலப்படமில்லாத
பலசரக்குப் பொருள்களை
உணவுப்பண்டங்களில்
நாளாந்தம் சேர்த்துக் கொள்ளுங்கள்!

பாவனையாளர்களின் நலன்கருதி
தரமான பலசரக்குப்பொருள்களை
மொத்தமாகவும் - சில்லறையாகவும்
வியாபாரம் செய்பவர்கள்

நாதன் சகோதரர்
33, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

உங்கள்
குழந்தைகளின்
அறிவுப் பசிக்கெனவும்
நாளொன்றுக்கு
50 சதம்
ஒதுக்கிடுங்கள்!

நங்கூரம்

சமூக அறிவியல் ஏடு
மாதசஞ்சிகை

விலை: ரூபா 15/=

தொடர்புகளுக்கு:

நங்கூரம்
அரசடிவீதி
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

உணவு வகைகளுக்கு
சுவையூட்டுவதும்
போஷாக்களிப்பதும்
பலசரக்குவகைகளே!

[redacted]

உங்களுக்குத்தேவையான
பலசரக்குப்பொருள்களை
வேண்டிய அளவுகளில்
நிதானமான விலைகளில்
தட்டுப்பாடின்றிப்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

[redacted]

லீலா ஸ்ரோர்ஸ்
இல. 4, பிரதான வீதி
சுன்னாகம்.

ராகமாலிகாவின் புடவைகள்
உங்களை மேலும் மேலும் அழகாக்குகின்றன
உங்கள் மனதில் மகிழ்ச்சி பெருகுகிறது

நவீன உடைகள்
விதவிதமான சாறிவகைகள்
எல்லா வயதினருக்கும் ஏற்ற ஆடைகள்
ராகமாலிகாவில்

**ராகமாலிகா**
04, நவீனசந்தை உட்புறம்
யாழ்ப்பாணம்.

உள்ளம் கவரும் நல்ல உடைகளை
எண்ணம் போல் ஏற்றவகையில்
விதுரா வழங்குகிறது

ரெடிமேற் ஆடைகள்
சாறிவகைகள் + உள்நாட்டு, வெளிநாட்டு உடைகள்
எல்லாவற்றையும் உங்கள் விருப்பத்திற்கு
விதுராவில் பெறுங்கள்

**விதுரா**
34, நவீன சந்தை உட்புறம்
யாழ்ப்பாணம்.

தரமான பலசரக்குப்பொருள்களை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ளக்கூடிய
முன்னோடி வர்த்தக நிறுவனம்

"புகழ் ஸ்ரோர்ஸ்"
இல. 3, பிரதான வீதி,
சுன்னாகம்.

உங்கள் அனைத்துத் தேவைகளையும்
நிறைவேற்றும் நிறுவனம்

பாடசாலைப்பிள்ளைகளுக்கான
அப்பியாசக்கொப்பிகள்
பயிற்சி நூல்கள்
பேனா, கலர்ப்பென்சில் வகைகள்
அலுவலகத்தேவைகளுக்கான உபகரணங்கள்

விடுதலைப் போராட்ட நூல்கள்
தாயக விடுதலைப் பாடல்கள்
ஒலிப்பதிவு நாடாக்கள்
இலக்கிய நூல்கள்
அழகு சாதனப்பொருள்கள் -
என்று உங்களின் தேவைகளை
தமிழருவி நிறைவேற்றுகிறது.

தமிழருவி
71, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.